# வன்னியமிர்தம்

## மணிவிழா மலர்



திரு நா.வன்னியசிங்கம்




யா/வைத்தீஸ்வராக் கல்லூரி

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

302.021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியமிர்தம்

திரு.நாகலிங்கம் வன்னியசிங்கம்
அதிபர் அவர்களின்

# மணிவிழா மலர்

வெளியீடு :
யா / வைத்தீஸ்வராக் கல்லூரி
யாழ்ப்பாணம்.
2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Principal




**Mr.N.Vanniasingham**
B.Sc. (Mgt) Dip in Ed. (Merit)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாசிச் செய்தி



யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய திரு.நா.வன்னியசிங்கம் அவர்கள் இன்று மணிவிழாக் காண்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். நீண்ட பழமையான வைத்தீஸ்வராக் கல்லூரி கல்விப் பாரம்பரியத்தில் தனக்கொரு இடத்தை வகுத்துக் கொண்டுள்ளது. இவ்வரிசையில் "யாழ் நூலை" நமக்குத்தந்த சுவாமி விபுலானந்தரை அதிபராகக் கொண்டது. ஆதீனக் குருமுதல்வனை மாணவனாகக் கொண்டதும் ஆகிய பாடசாலையின் ஆசிரியராக, பகுதித்தலைவராக, உப அதிபராக, பிரதி அதிபராக, அதிபராகக் கடமையாற்றிய திரு. வன்னியசிங்கத்தின் பணியை வைத்தீஸ்வராக் கல்லூரி தனியான இடத்தை வகுத்துக் கொண்டது. நிறைவான கல்வி, நிறைந்த ஆளுமை, எளிமையான தோற்றம், இறைபக்தி, இலக்கிய ஆளுமை, கணக்கியலில் நிறைவான ஆசிரியர், அனைத்துப் பாடங்களையும் கற்பிக்கக்கூடிய திறமை உள்ளவர். இவருடைய பணி பல சிறப்புக்களைக் கொண்டது. இவருடைய பணியினூடாகப் பாடசாலை பல வளர்ச்சிகளைக் கண்டிருக்கின்றது. ஓய்வு காலங்களிலும் நிறைவான சமூகப் பணியையும், சமுதாயப் பணியையும் ஆற்றி மண்ணில் நல்ல வண்ணம் வாழ வாழ்த்துகின்றோம். திரு.வன்னியசிங்கம், திருமதி. வன்னியசிங்கம் தம்பதிகள் நிறைவாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இவருடைய பணிகளை வாழ்த்தி விழா எடுக்கும் அனைத்து அன்பு உள்ளங்களையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

**இரண்டாவது குருமஹாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி ஆலயக் குருவின் ஆசியுரை



குருப் பிரம்மா குரு விஷ்ணு
குரு தேவோ மஹேஸ்வர: /
குரு சாக்ஷ ாத் பரப் ரம்ஹ
தஸ்மை ஸ்ரீ குரவே நமக: //

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. நா. வன்னியசிங்கம் அவர்கள் அகவை அறுபதில் தனது சேவையினின்றும் ஓய்வு பெறுகின்றார். "மாதா, பிதா, குரு, தெய்வம்" என்னும் ஆன்றோர் வாக்கிற்கிணங்க பெற்றோர்களுக்கு அடுத்த உயர்ந்த ஸ்தானத்தில் வைத்துப் போற்றப்படுகின்றவர். வித்தியாகுரு ஸ்தானத்திலுள்ள ஆசிரியராகும். "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்னும் முதுமொழிக்கிணங்க ஆசிரியப்பணி மிகவும் புனிதமானது. அத்தகைய ஆசிரியர்களை வழிநடத்தும் அதிபர் பணியோ மகத்தானது. இப் பணியை ஆற்றுவதற்கு நல்லாசிரியர் ஒருவரே கடமையாற்றத் தகுதி பெற்றவராவார். அந்த வகையில் சீரிய கல்வித் தகைமைகளும், நற்பண்புகளும் நிறைந்தவர் அதிபர் அவர்கள்.

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் இருபத்திமூன்று வருடங்கள் உன்னதமான ஆசிரியச் சேவையில் தம்மை ஈடுபடுத்திய அதிபர் அவர்கள் பொறுப்பு வாய்ந்த அதிபர் சேவையில் பன்னிரண்டு வருடங்கள் கடமையாற்றி வெற்றிகண்ட பெருமை மிக்கவர். தமது கடமைக்காலத்தில் கல்விசார்ந்த கடமைகளோடு, மாணவர்களின் ஒழுக்கம், அபிவிருத்தி, கலாசார, விளையாட்டுத்துறை ஆகிய பலவற்றையும் மேம்படுத்திப் பாதுகாப்பதில் அக்கறை காட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பாடசாலை மாணவ, மாணவிகளிடம் ஆன்மீக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி இந்து கலாசார விழுமியங்களை பாதுகாக்கும் வகையில் சமய விழாக்களைக் கொண்டாடி அவர்களைப் பங்குபெற வைப்பார். கல்லூரியில் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் சிவகாமி சமேத நடராஜப் பெருமானுக்கு உரிய காலங்களில் நடைபெறும் அபிஷேகங்களை நிறைவேற்றுவதோடு தினமும் ஆராதனை வழிபாடுகளைத் தவறாது நடாத்திச் சக ஆசிரியர்களையும், மாணவர்களையும் பங்குபற்றி நடாத்தி மகிழ்வார். மாணவர்களுக்கு சிவாச்சாரியார்கள் மூலம் சமய தீட்கைஷ வழங்கி வழி நடாத்துவார்.

இவ்வாறு பெயருக்கேற்றவாறு (ஏறு) சிங்கம் போல் பீடு நடையும், நேர்த்தியான ஆளுமையும் மிக்க ஓய்வு பெறும் அவர்களை இக் கல்லூரியின் பழைய மாணவனாகிய நாமும் மனமுவந்து பாராட்டி வாழ்த்துவதோடு எல்லாம் வல்ல வாலம்பிகா சமேத வைத்தீஸ்வராப் பெருமானினதும் சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானினதும் நல்லாசிகள் என்றென்றும் கிடைக்குமாறு வேண்டி ஓய்வுக்காலம் சீரும் சிறப்புடன் அமைய வேண்டி நிற்கின்றேன்.

"சர்வேஜனகா சுகினோ பவந்து"

பிரம்மஸ்ரீ முருகானந்தசர்மா
கல்லூரிப் பூசகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. நா. வன்னியசிங்கம் அவர்களின் மணிவிழாவும் மலர் வெளியீடும்



ஆசிரியராக, உயர்தர வகுப்புப் பகுதித் தலைவராக, உபஅதிபராக, இன்று வரை அதிபராக யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் மாத்திரமல்ல யாழ் கல்விச் சமூகத்தையே உன்னத இடத்திற்கு இட்டுச் செல்லத் தன்னாலான அரும் பணிகளையும், அயரா உழைப்பையும் வழங்கிய உயர்திரு.நா.வன்னியசிங்கம் அவர்களை பாராட்டுவதிலும், வாழ்த்துக்கள் கூறுவதிலும் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆசிரியப் பணியை வெறுமனே ஒரு வேலையாகக் கருதாது தன்னைப் பணிக்கு முழுமையாக அர்ப்பணித்ததனால் ஆசிரிய வாய்மையைக் கௌரவித்ததும் அல்லாமல் சமூகத்தினால் அனேக பாராட்டுக்களையும் பெற்று அதிபர் என்ற உயர் பதவியிலும் கல்விச் சமூகத்தின் உயர் அதிபர்களில் ஒருவராகவும் எம் மத்தியில் திகழ்ந்தார்.

தன் கல்விச் செயற்பாட்டுடன் மட்டும் நின்றுவிடாது எம் சமூகத்தின் அனேகமான கட்டுமானப் பணிகளிலும் ஆக்கபூர்வமான செயற்பாட்டுத் திட்டங்களிலும், சமூகத்திற்குச் சிறந்த கருத்துக்களையும், உழைப்பையும் உயர் திரு.வன்னியசிங்கம் அதிபர் அவர்கள் வழங்கி வருவது பாராட்டுக்குரியது.

உயர்திரு. வன்னியசிங்கம் அவர்கள் வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபராக ஓய்வு பெற்றாலும் சமூகத்திற்கான அவரது பொதுநலத் தொண்டுகளில் இன்னும் தன்னை முழுமையாக அர்ப்பணிப்பார் என்பது எங்கள் நம்பிக்கை. மணிவிழா நாயகனை நாம் மனதார வாழ்த்துவதோடு எல்லாம் வல்ல இறைவனின் ஆசி அவருடனும் அவர்தம் குடும்பத்தார் அனைவருடனும் நிறைவாக இருக்க ஆண்டவரை வேண்டுகின்றோம்.

**வண. செ. பி. நேசகுமார்**
**யாழ். குருமுதல்வர்,**
**இலங்கைத் திருச்சபை, யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண கௌரவ ஆளுனரின் வாழ்த்துரை



யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி ஆரம்பகாலம் தொட்டு கல்வித்துறையில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கும் ஒரு ஸ்தாபனமாகும். இதற்கு உறுதுணையாக இருப்பவர்கள் அதனுடைய அதிபர்களும், ஆசிரியர்க ளுமாவார்.

கல்வித்துறையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி நற்பெயரைச் சம்பாதித்துக் கொண்ட திரு. நா. வன்னியசிங்கம் அவர்கள் வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபராக 27.03.1998 தொடக்கம் 18.05.2010 வரை சேவையிலிருந்து இளைப்பாறும் வரை கடமையாற்றியுள்ளார். இதற்கு முன் 15.09.1987 தொடக்கம் 26.03.1998 வரை இவர் இக் கல்லூரியில் ஆசிரியராகவும், மற்றும் பிரதி அதிபராகவும் பணியாற்றியுள்ளார்.

மாணவர்களுக்கான சேவையே மகேசன் சேவை என்ற கோட்பாட்டிற்கு அமைவாக குரு என்ற மகத்தான ஸ்தானத்திலிருந்து கற்றோரும் மற்றோரும் மெச்சும் வகையில் இவர் எவ்விதத்திலும் சளைக்காது தனது பெரும் பணியை நிறைவேற்றியுள்ளார் என்றால் அது மிகையாகாது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல்வேறுபட்ட அனர்த்தங்கள் நிகழ்ந்த காலத்தில் வைத்தீஸ்வராக் கல்லூரியின் பிரதம பாகத்தைச் செவ்வனே வகித்து மாணவ சமுதாயத்தின் வளர்ச்சிக்கு திரு. வன்னியசிங்கம் அவர்கள் ஆற்றிய அரும்பணியானது எதிர்காலத்திலும் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்படும் என்று நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

சேவையிலிருந்து இளைப்பாறியிருக்கும் திரு. வன்னியசிங்கம் அவர்கள் சுகதேகியாக வாழ்ந்து சமுதாயத்திற்குத் தனது பங்களிப்பை நல்க வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**மேஜர் ஜெனரல் ஜீ. ஏ. சந்திரசிறி**
**கௌரவ ஆளுனர்,**
**வடமாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



சைவமும், தமிழும் வளர்ப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்ட வைத்தீஸ்வராக் கல்லூரி இன்று கல்விப் பாரம் பரியத்திலும், கல்விச் செயற்பாட்டிலும் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்து நிற்கின்றது. 1913ஆம் ஆண்டில் உயர்திரு.த.நாகமுத்து அவர்களால் இராமகிருஷ்ண மிஷனரியரின் ஆதரவுடன் வித்தியாலயமாக ஸ்தாபிக்கப்பட்டு இன்று சகல வசதிகளையும் உள்ளடக்கி 1AB கல்லூரியாக உயர்ந்து நிற்பதற்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய அதிபர்களை இன்றும் கல்விச் சமூகம் நினைவுகூர்ந்து கொண்டே இருக்கின்றது.

அந்தவகையில் அதிபர் நா.வன்னியசிங்கத்திற்கும் கல்லூரி வரலாற்றில் முக்கிய இடமுண்டு. கல்விச் செயற்பாடுகளில், அபிவிருத்திப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி உழைத்தவர் திரு.நா.வன்னியசிங்கம் அவர்கள்.

1987.09.15 இலிருந்து இக்கல்லூரியின் கணக்கியல் ஆசிரியராக, பகுதித்தலைவராக, உபதலைவராக, பிரதிஅதிபராக, அதிபராக பல்படி நிரல்களில் தனது பதவிகளை அலங்கரித்து கல்வித்துறையிலும், இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் நிறைந்த சேவையாற்றி வந்தவர். அது மட்டுமல்ல கல்லூரியில் சைவத்தையும், தமிழையும் வளர்க்க அரும்பாடுபட்டவர். தற்போது தனது கல்விப்பணியையும், நிர்வாகப் பொறுப்பையும் நிறைத்து இன்று அகவை அறுபதைக் கடந்து மணிவிழாக்காணும் சிறப்பைப் பெற்றிருக்கின்றார். கல்வி முன்னேற்ற நடவடிக்கைகளை செவ்வனே நிறைவேற்றி இளைப்பாறுகின்ற அதிபர் திரு.நா.வன்னியசிங்கம் அவர்கள் தனது ஓய்வுக்காலத்தில் தனது குடும்பத்தினருடன் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துவதில் மனநிறைவு அடைகின்றேன். மணிவிழாவைக் கொண்டாடும் கல்லூரிச் சமூகத்தையும் பாராட்டுவதிலும் அகமகிழ்வடைகின்றேன்.

**திரு.வீ. இராசையா,**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**வடக்கு மாகாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தறிவித்தவன் இறைவன்



1976ஆம் ஆண்டு முதல் இற்றைவரை ஏறத்தாழ 34 ஆண்டுக் காலத்தை ஆசிரியப் பணிக்கே தன்னை அர்ப்பணித்திருந்த யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் நா. வன்னியசிங்கம் அவர்கள் 18.05.2010ம் திகதி ஓய்வு பெறுவதை முன்னிட்டு அவருக்கு மணிவிழா எடுக்கவும், மலர் வெளியிடவும் ஆசிரிய நலன்புரிச்சங்கம் முன்வந்துள்ளமை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

மற்றைய தொழில்களைப் போலன்றி ஆசிரியத்தொழில் ஓர் அர்ப்பணிப்புத் தொழில். எழுத்தை அறிய வேண்டும் என்ற ஆவலுடன் வரும் பிள்ளைகளின் அறிவுக் கண்களைத் திறக்கும் தொழில். இந்தத் தொழிலில் 01.05.1976 ஆம் திகதி முதல் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும், உபஅதிபராகவும், பிரதி அதிபராகவும், படிப்படியாக உயர்ந்து 27.03.1998ஆம் திகதியிலிருந்து அதிபராகப் பணியாற்றி வரும் வன்னியசிங்கம் அவர்களின் கல்விச்சேவை மதிப்பிடற்குரியது.

அவரது நிழலிலே உருவாக்கப்பட்ட பல மாணவர்கள் இன்று உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் உயர் பதவிகளில் இருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். "எழுத்து அறிவித்தவன் இறைவன்" என்பதற்கிணங்க மாணவர் மத்தியில் இறைவனாக மிளிர்ந்த வன்னியசிங்கம் அவர்கள், கல்விப்பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும், கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெறாமல் தொடர்ந்தும் தனது சேவையை வழங்கிக் கொண்டிருப்பார் என நம்புகின்றேன்.

பழகுவதற்கு இனியவரான இவர், தனது ஓய்வுக் காலத்தில் பல்நலமும் பல வளமும் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

**திருமதி. யோ. பற்குணராசா**
**மாநகர முதல்வர்,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அதிபரின் வாழ்த்துரை



யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் சைவப் பாரம்பரியத்தினூடான கல்விப்பணியில் வைத்தீஸ்வராக் கல்லூரியின் பங்கு காத்திரமானதாகும். 97 ஆண்டுகள் யாழ்ப்பாணச் சமூகத்திற்கு கல்வியை வழங்கிய இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்கும், உயர்விற்கும் உழைத்த அதிபர்கள் பலர் மனதில் நிற்கின்றனர். பன்னிரண்டு அதிபர்களை இக்கல்லூரி இந்தத் 97 ஆண்டுகளில் கண்டுள்ளது.

கடந்த 23 வருடங்களாக இக்கல்லூரியின் உயர்வுக்காக உழைத்த அதிபர் நாகலிங்கம் வன்னியசிங்கம் அவர்களின் கல்விப்பணி மிகக்காத்திரமானது. 15.07.1987ல் இக்கல்லூரியில் ஆசிரியராக இணைந்து இக்கல்லூரிக்குரிய பகுதித் தலைவராக, உபஅதிபராக, பிரதிஅதிபராக, அதிபராகப் படிப்படியாகப் பல்வேறு நிலையில் தனது கடமைப் பொறுப்புக்களை ஆற்றி வந்தார். இவரது இந்தக் கல்விப்பணியில் அர்ப்பணிப்பு மிக்க கடமையுணர்வுடன் கல்லூரிக்காக உழைத்துப் பலரது பாராட்டையும், நன்மதிப்பையும் பெற்றார். 18.05.2010ல் ஓய்வுபெறும் அதிபர் அவர்களது மணிவிழா நாளில் அவரைப் பாராட்டுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். அவரது பணியைத் தொடர்வதற்கு இக்கல்லூரியின் அதிபர் பணிக்கு வந்ததையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ்ப்பாண நகரத்தின் புகழ்பூத்த கல்லூரியில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுக்கும் அறிவுக்கண் திறக்கும் கல்லூரியாக இக் கல்லூரி விளங்குகிறது. வறுமைக் கோட்டின்கீழ் வாழுகின்ற பெற்றோர்களின் பிள்ளைகளின் கல்விக் கண்ணைத் திறக்கத்தக்க ஓர் ஆதரவு தரும் கல்வி நிறுவனமாக வைத்தீஸ்வராக் கல்லூரி விளங்குகின்றது. கல்வி வாய்ப்புக்களில் சம சந்தர்ப்பங்களும் மறுப்பும் அற்ற மாணவர்களின் கல்வி நிறுவனமாக இது விளங்குகின்றது. புகழ்பூத்த பழைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களை வைத்தீஸ்வராக் கல்லூரி உருவாக்கியுள்ளமை வரலாறு சொல்லும் விடயமாகும். இக் கல்லூரியின் கல்விப்பணியை ஒரு சவாலாக ஏற்று கல்வி உலகிற்கே உணர்த்திய ஒரு அதிபர் திரு. வன்னியசிங்கபம் ஆவார்.

இவர் தனது கல்லூரியின் சேவையுடன் யாழ்ப்பாணக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஏற்படுத்தப்படும் விழாக்கள், வைபவங்கள் அனைத்திலும், பங்குபற்றத் தவறுவதில்லை. கோட்ட மட்டத்திலான போட்டிகள், விழாக்களிலும், முன்நின்று உதவுபவர். அத்துடன் யாழ். கோட்டத்தின் அதிபர்கள் சங்கத் தலைவராக இருந்து அதிபர்கள் நலன்களிலும், அதிகளவு அக்கறை எடுப்பவர். இக்கோட்டத்தில் அதிபர்கள் இடமாற்றம், ஓய்வுபெறுதல் போன்ற நிலைமைகளில் அவர்களின் பிரியாவிடை நிகழ்ச்சியைச் சிறப்பாக நிகழ்த்தி அவர்களைக் கௌரவிப்பதில் முதன்மையாளராக விளங்கியவர்.

தன்னுடைய கல்லூரியை மாத்திரம் நோக்காது வைத்தீஸ்வராக் கல்லூரியின் கொத்தணிக்குள் உள்ள பாடசாலைகளின் அபிவிருத்தியிலும் அக்கறை கொண்டவர். பரீட்சைக் காலங்களில் அந்தப் பாடசாலை மாணவர்களுக்கும் வினாத்தாளை அச்சிட்டு வழங்கியவர்.

நிர்வாக ரீதியாக 18.05.2010ல் ஓய்வுபெறும் அதிபர் தனது சேவைக்காலங்களில் எடுக்காத லீவினைப் பயன்படுத்தி புரட்டாதி 2010 வரை சேவையில் இருக்கின்றார். இவரது கல்விப்பணி நிறைவு பெறாமலும் தொடர்ந்தும் இக்கல்லூரியின் அபிவிருத்திக்காக கல்விப்பணி ஆற்ற வேண்டும். புகழ்பூத்த பாரம்பரியத்தைக் கண்ட இக் கல்லூரியின் உன்னத நிலைக்கு நாம் பணியாற்ற வேண்டும். அதற்குக் காத்திரமான பங்களிப்பை எமக்கு நல்க வேண்டும். இவரது ஓய்வுக்காலம் மகிழ்வாகவும், அமைதியாகவும் அமையவும் நீண்டகாலம் கல்வி, சமய, சமூகப் பணிகளை ஆற்றவும் நல்ல ஆரோக்கியத்தையும் வழங்க வேண்டும் என எல்லாம் வல்ல வண்ணை உமையாள் சமேத வைத்தீஸ்வரப் பெருமானை வணங்கி வாழ்த்துகின்றேன்.

திரு.மு.மகேந்திரன்
அதிபர்
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது நம்பிக்கையை நிலைநிறுத்திய அதிபர்

கல்விச் சேவையில் 1976ஆம் அண்டு கால்பதித்த வன்னி அவர்கள் 34 வருடங்களின் பின் ஒரு பாடசாலையைக் கல்வி ரீதியாகக் கட்டி எழுப்பி ஆத்ம திருப்தி காண்கின்றார். இவரது அதிபர் சேவைக்குக் கால்பதிக்க யாமே காரணம் என்பதில் அகமகிழ்வடைகின்றேன்.

1998ஆம் ஆண்டு யான் யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளராகக் கால்பதித்தபோது வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு அதிபர் தேவை என விளம்பரப்படுத்திய பொழுது வன்னி அவர்களைப் பல விண்ணப்பதாரிகளில் சிறந்தவராகத் தேர்வில் எனது குழு தெரிவு செய்து நியமனம் வழங்கப்பட்டது. இவரைப்போல் கல்லூரி வளர்ச்சியில் எம்மால் நியமிக்கப்பட்ட அதிபர்கள் எமது நம்பிக்கையை உறுதிபட நிறைவேற்றினர். கல்லூரியின் வளர்ச்சியில் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு உழைத்ததன் பயனாக இன்று வைத்தீஸ்வராக் கல்லூரி தரம்மிக்க கல்லூரியாக நிமிர்ந்து நிற்பதைக்காண முடிகின்றது. எனது "கல்வி உலா" என்ற நூலில் இவரது நியமனம் பற்றியும் குறிப்பிட்டுள்ளேன்.

கணக்கியல் ஆசிரியராக இருந்து, பகுதித்தலைவராகி, உபஅதிபராகி, பிரதி அதிபராகி, அதிபராகி உயர்ந்துள்ளமை ஒரு படிநிலை வளர்ச்சியாகும். இது எமது பாரம்பரிய கல்லூரி அதிபர் நியமனம் போன்றதே. இன்றைய சூழமைவில் 3 மணித்தியாலப் போட்டிப் பரீட்சைகள் மூலம் அதிபர்கள் தோற்றம் பெறுகின்றார்கள். இவர்களுக்கு எதுவித பட்டறிவோ, கல்வி நிர்வாக அனுபவமோ கிடையாது. இதற்கு விதிவிலக்காக வன்னியவர்கள் தனது பட்டறிவினாலும், ஆளுமை விருத்தியால் பெற்ற அனுபவங்களினாலும் பாடசாலையை நடாத்தி வந்துள்ளமை இவரது தலைமைத்துவப்பண்பு விருத்திக்கு எடுத்துக்காட்டாகும்.

இத்தகைய ஒரு கல்விமானும், சமூக சேவையாளனுமாகிய வன்னி அவர்கள் தனது கல்லூரியின் வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் திருப்திகண்டு, மணிவிழாக் காண்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். அவரது ஓய்வுகாலம் சிறக்கவும், தொடர்ந்து கல்விச் சமூகப் பணியாற்றவும், வாழ்த்தி அமைகின்றேன்.

**கலாநிதி.S. N. தணிகாசலம்பிள்ளை**
**ஓய்வுநிலை யாழ். மாவட்ட மேலதிக மாகாணக்**
**கல்விப்பணிப்பாளரும்,**
**மத்திய கல்வி அமைச்சின் ஆலோசகரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்துறை ஆளுமை மிக்க அதிபர்



யா/வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபராகப் பணிபுரிந்து இளைப்பாறிச் செல்லும் திரு.நா. வன்னியசிங்கம் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட வர்த்தகப் பட்டதாரியான இவர் 1976ஆம் ஆண்டில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் தனது ஆசிரியத்துவத்தை ஆரம்பித்தார். புனிதத்துவமான இத்தொழிலில் பதினொரு வருடங்கள் கடின உழைப்பினால் அப்பகுதிச் சிறார்களினதும், பெற்றார்களினதும் நன்மதிப்பைப் பெற்றவர் என்பதனைப் பலர் சொல்லிக் கேள்வியுற்றேன். அவரால் உயர்ந்தவர்கள் பல உயர்பதவிகளை அலங்கரிக்கின்றார்கள் என்பது கண்கூடு. 15.07.1987 இலிருந்து இளைப்பாறும் நாள்வரை யா/வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் கணக்கியல் ஆசிரியராகவும், பகுதித்தலைவராகவும், உபஅதிபர், பிரதி அதிபராகவும் பின் அதிபராகவும் கடமையாற்றி பாடசாலையின் கல்வி வளர்ச்சியில், பௌதீக வளவிருத்தியில், இணைப்பாடவிதான செயற்பாடுகளில், சமூகமேம்பாட்டில் கல்லூரியை முன்னணி வகிக்கச் செய்தவர். கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்களான அமரர் அம்பிகைபாகன், திரு. சிற்பிசரவணபவன், அமரர் .குணபாலசிங்கம் ஆகியோர்வரிசையில் வைத்து எண்ணக்கூடிய வகையில் கல்லூரியைத் திறம்பட வழிநடாத்தியவர். நாட்டில் அசாதாரண சூழ்நிலையிலும் கல்லூரியின் வளர்ச்சி எந்தவகையிலும் பாதிப்புறா வண்ணம் அல்லும் பகலும் அரும்பாடுபட்டு, பல சவால்களுக்கு முகம் கொடுத்து தர்மத்தின் வழிநின்று வெற்றி கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகாலத்தில் வைத்தீஸ்வராக் கல்லூரி 1AB பாடசாலையாக திகழ்ந்து போர்ச்சூழலாலும், பாரிய இடப்பெயர்வுகளினாலும் 1 C பாடசாலையாக மாறிய பொழுதிலும், இவரின் விடாமுயற்சியினால் மீண்டும் விஞ்ஞானப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 1 AB பாடசாலையாக தரம் உயர்த்திய பெருமை திரு.நா.வன்னியசிங்கத்தையே சாரும். யாழ்.நகரப் பாடசாலைகளில் கற்க அனுமதி கிடைக்காத பல வசதி குறைந்த மாணவர்கள் நலன்கருதி அவர்களையும் அரவணைத்து புகலிடம் கொடுத்து கல்வியில் உயரச் செய்து வெற்றி கண்டவர். யாழ். கல்வி வலயத்தின் பலவகையான போட்டிகள் நடாத்துவதற்கு கல்லூரியில் இடம்கொடுத்து முழுநேர ஊழியனாகச் செயற்பட்டு போட்டிகள் வெற்றிகரமாக நடந்தேற தோள் கொடுத்தவர். அதுமட்டுமன்றி தீவகக் கல்விவலயச் செயலமர்வுகள், மாவட்டமட்டப் போட்டிகள், ஆசிரிய வாண்மைவிருத்திச் செயலமர்வுகள், கல்வி அமைச்சின் போட்டிப் பரீட்சைகள் என்பன நடைபெற பூரண ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்கிய பெருமகன் யாழ்ப்பாணக் கோட்ட அலுவலகம் இயங்குவதற்கு, நான் வலயக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றிய காலத்தில் இடம் தேடியபோது மனங்கோணாது கோட்ட அலுவலகத்தில் இயங்க இடம் தந்ததோடு அதன் செயற்பாட்டிற்கும் உந்து சக்தியாக விளங்கியவர். ஆசிரியர்களின் சகல செயற்பாட்டிற்கும், துணையாகவிருந்து அவர்களின் மேம்பாட்டில் பங்கு கொண்டவர். யாழ். கல்வி வலயத்தின் "சாந்தி நிகேதனமாக" விளங்கும் இப்பாடசாலையின் நூலகம் மாணவரின் மேம்பாட்டிற்கு உதவும் வகையில் புனருத்தாரணம் செய்யப்பட்டு மாணவர்கள் தேடலுக்கு உதவும் வகையில் செய்தவர். இவரின் இளைப்பாறும் காலம் சிறப்பாக அமையவும், அவரின் குடும்பம் சீரும் சிறப்புமாக விளங்கவும் எல்லாம் வல்ல வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானை வணங்கி வாழ்த்துகின்றேன்.

**திருமதி. செல்வராணி மகாலிங்கம் S.L.E.A.S-1 இளைப்பாறிய**
**யாழ். மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும்,**
**யாழ் வலயக் கல்விப் பணிப்பாளரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமைமிக்க அதிபர்



உலக மயமாக்கல் நடைபெறும் இந்த யுகத்தில் முகாமையாளர்கள் பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இச்சவால்களுக்கு முகங்கொடுத்து நேர்நிலையான முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு முகாமையாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதற்கான பயிற்சிகள் எதுவும் இல்லாத நிலையில் தங்களது ஆளுமையால் பாடசாலைகளை நிர்வகித்து செல்லும் அதிபர்களில் ஒருவராக அதிபர் திரு நா.வன்னியசிங்கம் திகழ்கின்றார்.

ஆலமரங்களுக்கு கீழ் வளரும் ஒரு செடியாக இருக்கும் யா/வைத்தீஸ்வராக் கல்லூரியில் உள்ள மாணவ வளத்தை சமுகத்திற்கு ஏற்றவர்களாக மாற்றிய பெருமையும் அதிபர்திரு.நா.வன்னியசிங்கத்திற்கு உண்டு. ஒரு காலத்தில் புகழ்புத்த சைவப்பாரம்பரியம் உள்ள இப் பாடசாலையை அதன் மெருகு கலாசாரம் பாரம்பரியம் என்பவற்றை குறையாது அழியாது பேணி யாழ்ப்பாண நகரத்தில் பெயர் உடைய பாடசாலையாக வைக்கும் மிக கஷ்டமான கைங்கரியத்தை ஒரு தசாப்தத்திற்கு மேலாக ஆற்றி வந்துள்ளார் என்றால் மிகையாகாது. கல்வி அபிவிருத்தியில் கண்ணும் கருத்துமாக இருந்து சாதனைகளை படைத்த பெருமையும் இவ் அதிபர்க்கு உண்டு ஆசிரியர்களை தனது வலைப்பின்னலில் வைத்து வேலைப் பங்கீடு என்னும் சிந்தனையில் முரண்பாடு அற்ற நிர்வாகத்தை நடத்தியுள்ளார் இப்பாடசாலையில் புகழ்பூத்த அதிபர்களாக இருந்தவர்களின் பட்டியலில் அதிபர் திரு நா.வன்னியசிங்கம் இடம்பெறுகின்றார். சிறந்த ஆசிரியர் ஒருவராலேயே சிறந்த அதிபராக திகழ முடியும் என்னும் கருத்தை இவ்அதிபர் மெய்ப்பித்துள்ளார். அவர் கடமையாற்றிய பாடசாலைகளிலும் சிறந்த ஆசிரியராகத் தொண்டாற்றியதை அறியக்கூடியதாகவுள்ளது. அதிபர் திரு நா.வன்னியசிங்கம் ஓய்வு பெறுவது தவிர்க்க முடியாதது. அவர் ஓய்வு காலத்தில் தொடர்ந்து கல்வித் தொண்டாற்றுவதுடன் அவரும் அவரது குடும்பமும் சகலவளங்களையும் பெற்று வாழ எனது வாழ்த்துக்கள்.

**திரு.வே.தி.செல்வரத்தினம்**
**மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



நல்லாசிரியனாய், பண்பிலே தெய்வமாய், பார்வையிலே சேவகனாய் வாழும் திரு.நா.வன்னியசிங்கம் அவர்கள் யா/வைத்தீஸ்வராக் கல்லூரியின் வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் அயராது உழைத்த உத்தம புருஷர்.

கல்வி கற்பித்த காலத்தில் நன்மாணாக்கர்களை உருவாக்கி நாடு வளம் பெற நல்கியவர். பாடசாலை மாணாக்கர் வேற்றிட மாணாக்கர் என்று பாராமல் கற்றறிந்தார்க்குரிய நடுவுநிலைமையோடு கல்வி புகட்டுவதில் வல்லவர். இவரால் புலமை பெற்ற புகளோர்கள் உலகின் பல பாகங்களிலும் பணியாற்றி வாழ்ந்து இவருக்குப் புகழ் சேர்க்கின்றனர்.

இன்முகம் காட்டி, இனியவை கூறி தன்பால் வந்தார்களைத் தாய்போல் பேணும் தகைமையர். உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையர்.

"செல்விருந்து ஓம்பி வரு விருந்து பார்த்து இருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"
என்று என்றும் வாழ்பவர்.

பலகாலுங் காற்றினால் அலைக்கப்படாத எத்தகைய மரமும் வலுவாய், உறுதியாய் நிலைப்பதில்லை. ஆனால் அடுத்தடுத்துக் காற்றினால் அசைக்கப்படும் மரமோ உரம் ஏறப்பெற்று நிலத்திலே அழுத்தமாக வேர் ஊன்றுகின்றது. அச்சத்துக்கு ஏதுவான நிகழ்ச்சிகளின் நடுவே உயிர் வாழப் பெறுவதே நல்லோன் ஒருவனுக்கு நன்மையை அளிக்கின்றது. ஏனென்றால் அவற்றின் நடுவில் இருந்து பழகப் பழக அவன் அஞ்சா நெஞ்சினன் ஆகின்றான் என்பதற்கிணங்க வாழ்ந்த மணிவிழா நாயகன் குடும்பத்துடன் பல நன்மைகள் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

திருமதி. அருளேஸ்வரி வேதநாயகம்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபர் திருமிகு. நா. வன்னியசிங்கம் அவர்களின் மணிவிழாவினை முன்னிட்டுக் கல்லூரி வெளியிடவுள்ள மணிவிழா மலரூடாக அன்னாரை வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன். சுவாமி இராமகிருஷ்ணரின் சிந்தனையில் உருவான இக் கல்லூரியில் ஆன்மீகத் தலைவர்கள் சுவாமி விவேகானந்தர் உட்படப் பலர்கால் பதித்துள்ளனர். இவ்வாறான புனிதமான இக் கல்விச்சாலையில் புகழ்பூத்த அறிஞர்கள் பலர் அதிபர்களாக அலங்கரித்தனர்.

இவர்களை அடியொற்றிக் கடந்த 12 ஆண்டுகள் அதிபராகவும், 23 ஆண்டுகள் சீரிய ஆசிரியராகவும் இங்கு இவர் கடமையாற்றியுள்ளார். இளமைத் துடிப்புடன் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறிய இவர் சிறந்த வர்த்தகத்துறை ஆசிரியராக ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் 11 ஆண்டுகள் சீரிய பணியாற்றி தீவகக் கல்விச்சமூகத்தில் நன்மதிப்பினைப் பெற்றுக் கொண்டார்.

இவரிடம் உயர்கல்வி பெற்றுக் கொண்ட பலநூறு மாணவர்கள் பல்கலைக்கழகப் பட்டதாரிகளாகி உயர் பதவிகளை அலங்கரிக்கின்றனர். இது போலவே கல்லூரிப் பொறுப்புக்களினை ஏற்றுப் பல சவால்களுக்கு முகம் கொடுத்து சீரிய வளர்ச்சியினைப் பாடசாலைக்கு ஏற்படுத்தியுள்ளார் என்றால் மிகையொன்றுமில்லை. பல்வேறு இடர்களின் மத்தியிலும், உயர்தர விஞ்ஞானப் பிரிவினை மீளவும் ஆரம்பித்து கல்லூரியின் தரத்தினை மேம்படுத்தியுள்ளார். கல்லூரிச் சமூகத்துடன் நல்லுறவைப்பேணிப் பல அபிவிருத்திச் செயற்திட்டங்களை நிறைவேற்றி உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிர்ந்த நடை, நேரிய பார்வை, புன்சிரிப்பு, இவைதான் இவருடைய தோற்றம், மாணவர்களிடம் உள்ளத்தில் அன்பும், உதட்டில் கண்டிப்புடனும் அவர்களை நல்வழிப்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளார். அதிபர்கள், நிர்வாகிகள் மட்டத்தில் நன்மதிப்பைப் பெற்றுள்ள இவர்கோட்ட, வலய நிகழ்ச்சிகளைச் சிறப்பாக ஏற்பாடு செய்து நடாத்தி முடிப்பதில் வல்லவர்.

அர்ப்பணிப்புடன் நிறைவான சேவையாற்றி ஓய்வுபெறும் அதிபர் தன்னைப்போல் பணியாற்றக்கூடிய ஒருவரிடமே பாடசாலைப் பொறுப்பைக் கொடுத்துள்ளார். மணிவிழா நாயகன் குடும்பத்தில் பல்வேறு சிறப்புக்களைப் பெற்று நோய் நொடியின்றி நீடூழி சந்தோசமாக வாழ இறைவன் அருள் புரியப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.ப. விக்கினேஸ்வரன்**
**கல்விப் பணிப்பாளர்**
**வலிகாமம் கல்வி வலயம், சுன்னாகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியால் உயர்ந்த உத்தமன்



நிறைவான ஆசிரியராகத் திரு. நாகலிங்கம் வன்னியசிங்கம் அவர்களை முதலில் சந்தித்தேன். ஆசிரியருக்குரிய அர்ப்பணிப்புடனான பண்புகள் அவரிடம் நிறைவாகக் காணப்பட்டன. வகுப்பறை மாணவர்கள் அவரிடம் மிகுந்த நம்பிக்கை கொண்டவர்களாகக் காணப்பட்டனர். கனிவான, எடுப்பான குரல்வளம் கற்பித்தலுக்கு வலுவூட்டின. குறையாத பாட அறிவு கொப்பளித்துக் கொண்டிருந்தது.

கற்பித்தல் நுட்பங்கள் யாவும் அவரிடம் ஊறிவிட்டனவாகக் காணப்பட்டன. ஆசிரிய மாணவர் தொடர்பாடல் மிகவும் நெருக்கமாகக் காணப்பட்டதையும் உணர்ந்தேன். படிப்படியான விளக்கங்கள், வழிமுறைகள் யாவும் மாணவரின் அறிவுப் பசியை நிரப்பின. அவருடைய நிறைவான ஆசிரியப்பணி அவரைப் படிப்படியாக உயர்த்தின.

அவர் பணி அவரை அக் கல்லூரியின் அதிபராக்கியது. பாடசாலையில் ஒழுக்காறும், முகாமையும் சிறப்புற அமையக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தினார். பெற்றோர், ஆசிரியர் தொடர்புகள் நன்கமைந்தன. வெளித்தோற்றம், சுயநடத்தை யாவும் ஆசிரியர் தர்மம், அதிபர் முகாமை என்பவற்றுக்குகந்த விதத்தில் அமையப் பெற்றார். இவை அவரைச் சிறந்த முகாமையாளராக்கியது.

அவருடைய சேவையில் வணிகக்கல்வி கற்பித்தல் நுட்பமுறைகளைத் தேசிய கல்வி நிறுவனமூடாக ஆசிரியக் கல்வியூடாக வழங்கும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. அவரிடம் இயல்பாகவே வெளிவந்த நுட்பங்களை, திறன்களை ஆசிரியர்களுக்கு மிகவும் சாதுரியமாக ஊட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடம் கற்ற ஆசிரியர்கள் தேடியறிந்து, கண்டறிந்து கற்றலையும், ஆக்கத்திறன்களையும் பெற்றுக் கற்பிக்கும் விடயங்களையும் நன்கு தெளிவுபடுத்தலையும் கண்டு மனம் நிறைவு பெற்றார். அவரது ஆசிரிய சேவை, அதிபர் பணி ஆகியன ஆசிரிய கல்வித்துறையில் வெற்றிகரமாகச் செயற்பட பின்நின்று உதவின. அவரிடம் நான் கண்ட இன்னொரு சிறப்பான விடயம் எந்நேரமும் சுறுசுறுப்பாகவும், நிதானத்துடனும் செயற்பட்டமையாகும். இதனால் அவர் அதிபர் சேவைக்காலத்தில் பலவகையான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளக்கூடியதாயிற்று.

பாரம்பரியமும், சைவப்பண்பும் மிளிரும் பாடசாலைச் சூழலில் அவர் ஒன்றியவராய், பாடசாலைச் சம்பிரதாயங்களைக் கட்டிக்காத்த பெருமைக்குரியவரானார். தான் பழகுகின்றவர்களோடும், தன் சேவையில் பல்வேறு வகையில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஆட்களுடனும் உகந்த தொடர்பை வைத்திருக்கும் ஆளணி முகாமைத்துவம் அவரைச் சிறந்த முகாமையாளராக்கியது. பெற்றோரிடமும் பிரதேச மக்களுடனும் நடவடிக்கை மேற்கொள்ளும் போதும், முடிந்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பங்குபற்றச் செய்தல் மூலம் சிறந்த மக்கள் தொடர்பை வைத்துக் கொண்டார்.

சூழலில் உள்ள ஏனைய பாடசாலை ஆசிரியர்கள், பிரதேச அறிஞர்கள், மதகுருமார் ஆகியோருடன் கருத்துள்ள தொடர்பை வைத்திருந்தமை யாலும், சந்தர்ப்பத்திற்கேற்ப பங்குபற்றச் செய்தல் மூலமும் தனது பாத்திரத்தை வெற்றிகரமாக்கிய பெருமைக்குரியவராகின்றார். அவரது முன்மாதிரியான அம்சங்கள் கல்விப்புலம் சார்ந்தோர் கற்றுக் கொள்ளக்கூடிய அம்சங்கள் என்ற பெருமைக்குரியவராகின்றார். அவர்பணி ஓய்வுடன் நின்றுவிடாது வாழ்நாள் முழுவதும் தொடரவும், பல்லாண்டு காலம் நலமுடன் வாழவும், இறையாசியுடன் கூடிய வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. தனலட்சுமி வில்வநாதன்**
B.A, Dip-in-Ed, M. phil. Ed
**சிரேஷ்ட விரிவுரையாளரும்,பிராந்திய இணைப்பாளரும்**
**தேசிய கல்வி நிறுவகம், யாழ் பிராந்தியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியல் பேராசிரியரின் ஆசிச் செய்தி



திரு.நா.வன்னியசிங்கம் அவர்கள் தமது ஆசிரிய சேவையிலிருந்தும் அதிபர் சேவையிலிருந்தும் இளைப்பாறுகின்றார். எமது பிரதேசத்தின் முதன்மையும், முன்னிலை வளர்ச்சியும், பாடசாலைகளின் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளில் தங்கி உள்ளது. குறிப்பாகச் சமூகத்தின் சமநிலையையும், பண்பாட்டுக் கைமாற்றலையும், பாடசாலைகள் தான் நிலைபெறச் செய்கின்றன. இத்துணை முதன்மையான பாடசாலைக் கல்வி என்ற உப அமைப்பில் 34 ஆண்டுகள் பணியாற்றிய உளநிறைவுடன் ஒய்வு பெறுகின்றார். கல்வித்துறை சார்ந்தவன் என்ற வகையில் அவரை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு.வன்னியசிங்கம் எனது நீண்டகால நண்பர். ஏறக்குறைய 35 வருடங்களாக நல்ல நண்பராக விளங்குபவர். வித்தியோதயப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்களின் வர்த்தக முதல் அணி மாணவர்களில் இவரும் ஒருவர். நாடறிந்த கணக்கியல் ஆசான். கற்பிப்பதால் புகழ் பெறுதல் எளிய காரியமன்று. “வன்னியசிங்கம் என்றால் கணக்கியல்” என்ற புகழ்வாசகம் என்றும் நிலைத்திருக்கும்.

நான் படித்த பாடசாலைகளில் சமூக சமரச நோக்குடன் உயர்ந்து நிற்பது வைத்தீஸ்வரா வித்தியாலயம். இன்று வைத்தீஸ்வராக் கல்லூரி என உயர்ந்து நிற்கின்றது. மிக மோசமான காலப்பகுதியில் கல்லூரியைக் கட்டிக்காத்த கல்விமான் இவர். இதற்காகப் பழைய மாணவன் என்ற வகையில் நன்றிகூறி வாழ்த்துகின்றேன். அதிபர் வன்னியசிங்கம் கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளைக் காலம் மறவாது இதற்காகக் கடவுளின் ஆசீர்வாதங்கள் அவருக்குக் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வு பெறுதல் என்பது "எதுவும் செய்யாதிருத்தல்" என்பதன்று. எதிர்காலத்தில் வன்னியசிங்கம் அவர்கள் தமது மகிழ்ச்சி, குழந்தைகளின் குதூகலம், சமுதாய மேம்பாடு என்பவற்றுக்காக தமது நேரத்தை ஒதுக்க வேண்டும். இதற்கான உடல் ஆரோக்கியம், உள வலிமை, பொருளாதார பலம் என்பவற்றைப் பெற்று நிறைவான மனிதராக வாழ வாழ்த்தி மகிழ்கிறேன்.


பேராசிரியர். மா. சின்னத்தம்பி
கல்வியியற் பேராசிரியர்
தலைவர் சட்டத்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைத் தலைமைத்துவத்திற்கு ஒரு விடிவெள்ளி



திரு. நாகலிங்கம் வன்னியசிங்கம் அவர்களும் நானும் பாடசாலை நண்பர்கள் மட்டுமன்றி குடும்ப உறவினர்களும் எனக் கூறிக் கொள்வதில் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன். அவரது ஒவ்வொரு அசைவும் கல்வியூடாக எப்படித் தனது குடும்பத்தையும், சமூகத்தையும் முன்னேற்றலாம் என்பதிலேயே தடம் பதித்திருந்தது. அவரும் நானும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்விகற்ற காலத்திலேயே அவர் கல்வியில் காட்டிய அக்கறையைக் கண்டு வியந்திருக்கின்றேன். வணிகக் கல்வியைக் கற்று முதன்முதலில் பல்கலைக்கழகம் பிரவேசித்தவர்களும் நாங்கள் தான் என்பதில் எமக்கு எப்பொழுதுமே பெருமிதம் உண்டு. எழுபதுகளில் சிறீஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்திற்குப் பிரவேசித்த நாம் அங்கு தொழில் நிர்வாகமாணிப் பட்டத்தைக் கற்கும் வாய்ப்பைப் பெற்றோம். நண்பனும் நானும் ஒரே விடுதியில் அதுவும் ஒரே அறையில் தங்கியிருந்து கல்வி கற்கும் வாய்ப்பும் எமக்குக் கிடைத்தது. அப்பொழுது தான் நண்பன் வன்னியசிங்கம் ஒரு நாளைக்கு எத்தனை மணித்தியாலம் படிக்கிறார் என்பதை நேரடியாகப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. நாங்கள் பல இடங்களுக்குச் சென்று வருவோம். ஆனால் நண்பர் வன்னியசிங்கம் படிப்பதற்கு இருந்த மேசையைவிட்டு எழுந்து செல்வதில்லை. உண்மையில் அவர் கல்வியில் காட்டிய அக்கறை பல்கலைக்கழக நண்பர்களால் புகழ்ந்து பேசப்பட்டது எனக் கூறினால் அது மிகையாகாது.

நண்பர் வன்னியசிங்கமும் நானும் பட்டப்படிப்பை முடித்துக் கொண்டதும் நான் கொழும்பில் தங்கி நிற்க அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்தவர். உடனடியாகவே "வெற்றிவேல் அக்கடமி" என்னும் தனியார் கல்வி நிறுவனத்தில் கற்பிக்கத் தொடங்கி விட்டார். கணக்கியலைக் கற்பிப்பதில் தனக்கென தனியிடத்தைப் பெற்றுக் கொண்ட அவர் மாணவர்களிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல ஆசிரியராக மாறினார். இதன் காரணமாகத் தனியார் கல்வி நிறுவனங்கள் பல போட்டியிட்டு அவரைத் தமது நிறுவனங்களின் கணக்கியல் ஆசிரியராக நியமித்தனர். கணக்கியலைக் கற்பிப்பதில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக பாடசாலையிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் "முடிசூடா மன்னனாக" நண்பர் வன்னியசிங்கம் விளங்கினார். அவரிடம் கற்றால் பல்கலைக்கழகம் புக முடியும் என்ற நம்பிக்கை மாணவரிடையே தோற்றம் பெற்றமையால் அவரைத் தேடிச் சென்று கற்கத் தொடங்கினர் மாணவர் கூட்டம். இக்காலத்தில் அவருக்கிருந்த பேரையும் புகழையும் கண்டு மகிழ்ந்தவர்களில் நானுமொருவன் என்பதைப் பெருமையுடன் கூற ஆசைப்படுகின்றேன்.

நண்பர் வன்னியசிங்கம் நல்ல ஆசிரியராக, நல்ல அதிபராக மட்டுமன்றி சமூக முன்னோடியாகவும் திகழ்பவர் எனக் கூறினால் அது மிகையாகாது. அவரை அதிபராகப் பெற்றுக் கொண்டமை வைத்தீஸ்வராக் கல்லூரி பெற்ற பாக்கியம் என்றே கூறவேண்டும். இக்கல்லூரியின் கல்விச் செயற்பாடுகளும், இணைச் செயற்பாடுகளும் எவ்வளவு விரைவாக வளர்ச்சி கண்டது என்பதை நான் நண்பர் வன்னியசிங்கம் காலத்தில் கண்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பாடசாலையின் முன்னேற்றம் அதிபரில் தங்கியுள்ளது என்பதற்கு வைத்தீஸ்வராக் கல்லூரி எடுத்துக் காட்டாகும்.

நண்பர் வன்னியசிங்கம் ஒரு கடமைவீரர் மட்டுமன்றி எதையும் நேரடியாக எடுத்துக்கூறும் துணிச்சலுடையவர். அவர் பதவியில் இளைப்பாறுவது காலத்தின் தேவையாக இருந்தாலும் பாடசாலைக் கல்விச் சமூகத்துக்கும் அது பாரிய இழப்பாகும். அகவை அறுபதிலும் உற்சாகத்துடன் பணியாற்றும் நண்பர் வன்னியசிங்கம் பதவியில் இளைப்பாறினாலும் கல்விச் சேவையில் தொடர்ந்தும் பணியாற்ற எல்லாம் வல்ல இறைவன் நல்ல உடல் ஆரோக்கியத்தையும், மனவலிமையையும் கொடுக்க வேண்டுமென இறைஞ்சி அவர் பல்லாண்டு காலம் வாழ என் உளமார்ந்த வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பேராசிரியர். க. தேவராஜா**
**பீடாதிபதி,**
**முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



ஆசிரியர், அதிபர் சேவையில் நான்கு சகாப்தங்கள், அதுவும் நிகழ்கால சூழமைவில் நீடித்து நிற்பது ஒரு சாதனைதான். சிக்கல்களை முகங்கொள்வதும் சிரித்த முகத்துடன் அவைகளுக்கு தீர்வு கண்டு கொள்வதும் ஓர் தனி ஆற்றல்தான் இவ்வாறான நிர்வாகத்திறன் கொண்ட ஒரு சில ஆசிரியர்கள், அதிபர்களில் எம்மிடையே வாழ்கின்ற ஒருவராக தனது முப்பத்தைந்து வருடகால ஆசிரிய அதிபர் பணியில் இருந்து மணி விழா காணும் எனது நண்பன் வன்னியசிங்கமும் ஒருவராகிறார் என்பதை எண்ணும் போது மனம் எல்லையில்லா மகிழ்வுறுகிறது. பேர் சொல்லப்படும் புகழ்பூத்த அதிபர்கள் வரிசையில் அவர் தம் பெயரும் பதிவு பெறுகிறது. இத்தனை பெருமைக்குரிய அதிபர் வன்னியசிங்கம் எனது ஆத்மார்த்த நண்பர்களில் ஒருவர். நான்கு சகாப்த நட்புரிமையுடையவர்.

பாடசாலை பல்கலைக்கழக மட்டங்களில் கணக்கியல் பாடநெறியை கற்றுத்தேர்ந்த முதல் அணி மாணாக்கர். கணக்கியலை எழுபதுகளில் உயர்தர வகுப்பு மட்டத்தில் மாணவர்களால் மிக விரும்பிக் கற்கப்பட்ட பாடநெறியாக்கியதில் பெரும்பங்கு அவருக்குண்டு. தூங்கும் நேரம் தவிர்ந்த மிகுதி நேரத்தைக் கால்நூற்றாண்டு காலம் கணக்கியல் பாடநெறியின் உயர்நிலைக்கு உரமாக்கியவர்.

தொடர்ந்து அதிபர் சேவையில் தன்னை இணைத்துக்கொண்டதும் தனது நிர்வாகத்திறன் மூலம் வைத்தீஸ்வரா அன்னையை இடர்களுக்கு மத்தியில் இன்றைய நிலைக்கு உயர்த்தியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது கல்வி நிர்வாக ஆற்றல் திறனுக்குச் சான்றுபகர்வனவாக யாழ் கோட்ட அதிபர் சங்கத்தலைவர் பதவி யாழ் றோட்டரிக் கழக உபதலைவர் பதவி, யாழ்ப்பாண வலய பரீட்சைச்சபை உறுப்பினர் தொண்டமானாறு வெளிக்கள நிலைய நிர்வாக உறுப்பினர் என்னும் பதவிகள் அமைகின்றன.

இவற்றுக்கும் மேலாக அரசசார்பற்ற நிறுவனங்கள், சமூக அமைப்புக்களினூடாக சமூகப்பணியையும் ஆற்றும் மணிவிழா நாயகன் நண்பன் வன்னியசிங்கமும் அவரது குடுப்பத்தினரும் பல பேறுகள் பெற்று வாழ எல்லையில்லா அன்பு வாழ்த்துக்கள்.

**கந்தையா சிவராஜா**
**விரிவுரையாளர் வணிகத்துறை**
**இணைப்பாளர் வெளிவாரிப்பட்டப்பதிவுகள்,பரிட்சைகள் அலகு**
**யாழ். பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்ந்தும் ஓயாத சேவைகள் தொடரும் இனியவர்.......



திரு.நா.வன்னியசிங்கம் அவர்கள் இரு தசாப்த காலத்துக்கு முந்தியது முதல் எனது நண்பரானார். கற்றாரை கற்றாரே காமுறுவர் என மேல் நிலையிலும், பாம்பின் கால் பாம்பறியும் என கீழ் நிலையிலும் குறிப்பிட்டாலும் சேவையாளரைச் சேவையாளரே அறிவர் என்பது வெளிப்படை. கல்விச் சேவையே பெரும் சமூக சேவையெனினும் அத்துடன் நின்றுவிடாது, தான்சார்ந்த தொழிற்சங்கங்கள், தன்னை வளர்த்த தமிழும் சமயமும், சமூகம் வாழ வளர அவ்வழிகளில் தொண்டாற்றும் அமைப்புக்கள் என பல துறைகளிலும் அணிசேர்த்து சேவையாற்றும் தன்மையுள்ளோர் சிலரே இவர்களில் ஒருவராக திகழ்பவர் எனது நண்பர் வன்னியசிங்கம்.

மேலும் கீழுமாய் இடித்துத் தள்ளினும் வீழ்ந்துவிடாது கட்டடங்களை மட்டுமல்ல மக்களையும் கட்டிக்காத்த பெருமை வடமாகாண அரச அலுவலர்களையே சாரும். அந்த வழியில் கல்வியெனும் பெருவிருட்சம் வீழ்ந்துவிடாது காப்பாற்றும் ஆசிரியராய், அதிபராய் அதிலும் வரலாற்றுச் சிறப்புமிக்க வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபராய் அதற்கு மேலும் மெருகூட்டியவர் வன்னியசிங்கம் என்றால் மிகையாகாது. வைத்தீஸ்வராக் கல்லூரியின் படிகளில் ஆசிரியராய் கால்பதித்துப் படிப்படியாய் முன்னேறியது மட்டுமன்றி கல்லூரியையும் காலத்திற்கேற்றவகையில் முன்னேற்றி வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபராகி பன்னிரண்டு வருடங்கள் பணிசெய்து ஓய்வுபெறும் வரலாறு ஒரு பெரும் வரலாறாகும்.

வடமாகாணத்தின் சிறந்த அரச அலுவலர்களுக்கு எங்கே ஓய்வு? ஒன்றில் ஓய்வின் பின் ஒப்பந்த சேவை அழைக்கும் இல்லையேல் தன்சார்ந்த சமுகசேவை வந்தழைக்கும். நண்பா வன்னியசிங்கா ....! உனக்கும் ஓய்வேது? தொடரும் உன் சேவைகள் கல்விக்காய், சமூகத்திற்காய், சமயத்திற்காய் தொடர்ந்தும் தொடரட்டும் வாழ்த்துகின்றேன் ஆசிகளுடன்.

**ந.சதாசிவ ஐயர்**
**பிரதிப் பதிவாளர் நாயகம்**
**கொழும்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோன்றிற் புகழொடு தோன்றுக....



யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் இணைந்து அக் கல்லூரியின் அதிபரும், என் இனிய நண்பருமான திரு. நா. வன்னியசிங்கம் அவர்களுக்கு மணிவிழா எடுப்பதற்கும், மணிவிழா மலர் வெளியிடுவதற்கும் தீர்மானிப்பதை அறிந்து பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்லூரியின் அதிபராக நான் கடமையாற்றத் தொடங்கிய பின்னர் அதன் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு, கல்லூரிச் சமூகத்துடன் இணைத்து விடுத்த வேண்டுகோளைக் கல்வித் திணைக்களம் கவனத்திற்கு எடுத்துக் கொண்டதன் விளைவாக சிறந்த கணக்கியல் ஆசான் என ஏற்கனவே முத்திரை பதித்துக்கொண்ட திரு. நா. வன்னியசிங்கம் அவர்களின் சேவை 15.09.1987 தொடக்கம் வைத்தீஸ்வராவுக்குக் கிடைத்தது. அனைவரும் எதிர்பார்த்ததற்கிணங்க அர்ப்பணிப்பு, கடமையுணர்ச்சி, துறைசார்ந்த ஆழ்ந்த அறிவு, கற்போரின் நிலையறிந்து கற்பிக்கும் பாங்கு, ஆசிரிய சகோதரத்துவம், நிர்வாகத்துடனான ஒத்துழைப்பு போன்ற பண்புகளால் மிக விரைவிலேயே கல்லூரியில் தனக்கென ஓர் தனியிடத்தை அவர் பெற்றுக் கொண்டார். அவர் வருகையால் கல்லூரியின் உயர்தர வணிகபீடம் களைகட்டி, மாணவர்கள் நிரம்பி வழிந்தார்கள். இவரின் கணக்கியல் கற்பித்தலால் தேடிவரும் மாணவர் தொகை அதிகரித்தது. அவர்களிடமிருந்து கிளர்ந்தெழுந்த தலைமைத்துவப் பண்புகள் அவரைப் பகுதித்தலைவர், உதவி அதிபர், பிரதி அதிபர் ஆகிய பதவிகளிற்குப் படிப்படியாக அமர்த்தி, இறுதியில் அதிபர் என்ற உச்சநிலைக்கு அவரை இட்டுச் சென்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக, கல்வி சேவைகளால் சர்வதேசப் புகழ்பெற்ற ஸ்ரீ இராமகிருஷ்ணமடத்தின் நிர்வாகத்தில் யாழ்ப்பாணத்தின் முன்னணிக் கல்லூரிகளில் ஒன்றாக வைத்தீஸ்வராவைக் கட்டியெழுப்பிய கல்விமானும், அறிஞருமான அமரர்.ச.அம்பிகைபாகன் அவர்களுக்குப் பின்னர் அதிபர் களாகப் பணியாற்றியவர்களில் அதிக ஆண்டுகள் அப்பணியை அணி செய்தவர் நண்பர் திரு. நா. வன்னியசிங்கம், ஆனால் ஆண்டுகளை எண்ணிப் பெருமைப்படாமல் அர்த்தமுள்ள, ஆக்கபூர்வமான செயற்பாடுகளால் வைத்தீஸ்வராவுக்குப் புகழையும், பொலிவையும், புதுப் பெருமையையும் ஈட்டிக்கொடுத்தவர் இவர் என்றால் மிகையில்லை. பொதுப் பரீட்சைகளில் மாணவரின் திறமைச்சித்தி வீதம் அதிகரித்தமை, பல்கலைக்கழகத்திற்குக் கற்பதற்கு தகுதியுடையோரின் தொகையில் ஏற்பட்ட அதீத வளர்ச்சி, பல்கலைக்கழகம் சென்றோர் தொகையில் அதிகரிப்பு, பல்வேறு மட்டங்களில் நடாத்தப்பட்ட பேச்சு. ஆக்க இலக்கியம், இசை, நடன, நாடகப் போட்டிகளில் மாணவர்கள் பலர் பரிசுகளும் பாராட்டுக்களும் பெற்றமை மாணவர்களின் கல்வி, கலாசார, விளையாட்டுத்துறைகள் பெருமளவில் பாதிப்படையா வண்ணம் இவ்வதிபர் திட்டமிட்டுச் செயற்பட்டதன் விளைவுகளே.

கல்லூரிக் கவின்கலை மன்றத்தின் "லலித மஞ்சரி", தமிழ் பேரவையின் "தமிழ் அலைகள்", சென் ஜோன்ஜ் அம்புலன்ஜ் படைப்பிரிவின் "ஊராண்மை", வணிக மன்றத்தின் "வணிக தீபம்", இன்ரறக்ட் கழகத்தின் "துருவன்", கணனி மன்றத்தின் "தகவல்துளிர்" ஆகியவை அச்சுவாகனம் ஏறி மாணவர்களின் எழுத்தாற்றலை எடுத்தியம்பிக் கொண்டும், அவர்களின் பல்வேறு சாதனைகளைப் பட்டியலிட்டுக் கொண்டும், பவனி வருகின்றன. இவற்றுக்கெல்லாம் மூலமூர்த்தியாக விளங்கியவர் திரு.நா. வன்னியசிங்கம் அவர்களே. யாழ்ப்பாணக் கோட்ட அதிபர் சங்கத் தலைவராகவும், யாழ்ப்பாண றோட்டரிக் கழகத்தின் உப தலைவராகவும், தெரிவு செய்யப் பெற்றமை அவருடைய ஆளுமைக்கு கல்விமான்களிடமிருந்து கிடைத்த அங்கீகாரம் எனப் பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவும், ஆற்றலும், அனுபவமும் நிறைந்த ஓர் அதிபரின் சேவைகளை எவ்வாறு கௌரவிக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக மணிவிழாவும், மணிவிழாமலரும் அமையும் என எதிர்பார்க்கின்றேன். திரு. நா. வன்னியசிங்கம் அவர்களுக்கும், அவர் "காரியம் யாவினும் கைகொடுக்கும்" அவரின் இல்லத்தரசிக்கும், பிள்ளைகளுக்கும் என் இதயம் கனிந்த வாழ்த்துக்களையும், பாராட்டையும் தெரிவிக்கின்றேன். திரு. நா. வன்னியசிங்கம் அவர்களின் ஓய்வுகாலம் பரந்து விரிந்து பல்லாற்றானுஞ் சிறக்கவும், வைத்தீஸ்வரா தொடர்ந்தும் வீறுநடை போடவும், கல்லூரி மண்டபத்தில் நின்று எந்நாளும் ஆடிக்கொண்டும், எம்மையெல்லாம் ஆட்டிக்கொண்டும் அருள்புரிகின்ற ஆடல் வல்லானின் பாதார விந்தங்களைப் பணிந்து வணங்குகின்றேன்.

திரு.சி.சிவசரவணபவன் (சிற்பி) M.A.S.L.E.A.S
செயல்நிலை அதிபர்
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி
கந்தரோடை, சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கடமையே கண்" எனப் பணிபுரிந்தவர்



அதிபர் திரு. நா. வன்னியசிங்கம் இப்பாடசாலையில் 23 வருடங்கள் பணியாற்றினாலும், இறுதிப் 12 வருடங்கள் அதிபராக அர்ப்பணிப்போடு சேவை செய்து அனைவரதும் பாராட்டையும், நன்மதிப்பையும் பெற்றவராக விளங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். அவருக்கு கல்லூரிச் சமூகம் ஒன்றிணைந்து மணிவிழா எடுப்பது காலப் பொருத்தமே.

பாடசாலைச் சுற்றாடலை நன்கு உணர்ந்தவராக, தனது திறமையாலும், விடாமுயற்சியாலும் பல இடங்களுக்கும், சவால்களுக்கும் முகம்கொடுத்து தலை நிமிர்ந்தவராக, மனஉறுதியோடு போராடியவராக, தர்மத்தின் வழிநின்றுப் பாடசாலையைச் செவ்வனே நடத்தியுள்ளார். என்றால் அவரின் முகாமைத்துவத்துக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். பரிசுத்தின அறிக்கைகள் இவற்றைப் படம் பிடித்துக்காட்டி நிற்கின்றன. நான் அதிபராக இருந்த காலத்தில் அவர் எனக்கு நிர்வாகத்தில் உற்ற துணையாக இருந்து அனைத்து வழிகளிலும் உதவி புரிந்து பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரிதும் பங்களிப்பு நல்கினார் என்பதனையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூர விரும்புகின்றேன். நாட்டின் அசாதாரண சூழ்நிலையிலும், பாடசாலையின் வளர்ச்சி தடைப்படாமல் முன் கொண்டு செல்ல அனைத்து வழிகளிலும் சேவையாற்றியுள்ளார். ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் யாவரதும் ஒத்துழைப்புடன் பாடசாலையை முன்னணி நிலைக்குக் கொண்டு வந்துள்ளார். வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபர்கள் வரிசையில் நீண்டகாலம் தொடர் சேவையாற்றி அகவை 60ஐப் பூர்த்தி செய்து ஓய்வு பெறுவதையிட்டு பெரிதும் கவலையடைகின்றேன். ஆசிரியராக இருந்த காலத்திலிருந்து அதிபராகி ஓய்வு பெறும் காலம் வரை பாடசாலையில் கடமைவீரனாகச் செயலாற்றிய அன்னார் பாடசாலையைவிட்டுச் செல்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய இழப்பென்றே கருதுகின்றேன். பாடசாலையின் வரலாறு, பாரம்பரியங்கள் தெரிந்த ஒருவர் இல்லாமையால், பாடசாலைக்கு வரும் புதியவர்கள் எப்படி அதனை ஈடுசெய்யப்போகின்றார்கள் என்பது எனது கவலையை இரட்டிப்பாக்குகின்றது.

ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும் என்பதற்கொப்பச் செயற்பட்ட கடமைவீரனின் ஓய்வுகாலம் மகிழ்ச்சிகரமாகவும், மன அமைதியாகவும் அமையவும், மனைவி பிள்ளைகளுடன் நீண்டகாலம் வாழ்ந்து சமூகப்பணி, சமயப்பணி ஆற்றக்கூடிய வல்லமையை வைத்தீஸ்வரப் பெருமான் அருள வேண்டுமெனவும் கேட்டு, மணிவிழா சிறக்கவும், வாழ்த்துகின்றேன்.

**திரு. து. சந்தோசம்**
**ஓய்வு பெற்ற அதிபர்**
**யா/வைத்தீஸ்வராக் கல்லூரி யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் பெற்ற இன்பம் பெறுக..



2006 ஆம் ஆண்டில் மிகஇடர் மிகுந்த காலப்பகுதி, தீவகப்பகுதிகளுக்கான போக்குவரவுகள் சீரற்று இருந்த வேளை, தீவகப்பகுதி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு, செயலமர்வுகளை யாழ் நகரில் நடத்த வேண்டிய நிர்ப்பந்தம், தீவகவலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.அ.ஸ்ரனிலாஸ் அவர்களின் வழிகாட்டலுடன் திரு. நா.வன்னியசிங்கம் அவர்களை அணுகினோம். திரு.அ.ஸ்ரனிலாஸ் அவர்களும் உடன் இருந்தார். பாடசாலையில் இடவசதியை அனுமதித்ததுடன் செயலமர்வுக்கு அவசியமான வளங்களையும் தாராளமாய்ப் பயன்படுத்தலாம் என நாம் பெற்ற நன்மைகளைப் பெறுக இக் கல்வியுலகு என்னும் பெரும் தன்மையுடன் நடந்து கொண்டவர் திரு.நா.வன்னியசிங்கம் அவர்கள் இச் சந்திப்பு முடிந்து திரும்பும் வேளையில் இடைவழியிலேயே திரு.ஸ்ரனிஸ்லாஸ் அவர்கள் தான் திரு.நா.வன்னியசிங்கம் அவர்களிடம் வணிகத்துறைப் பாடங்களைக் கற்றதாகவும் அவரின் பெரும் தன்மையை அறிந்து தான் எங்களை அவரிடம் அழைத்துச் சென்றதாகவும் குறிப்பிட்டார். அவ்இடர் மிகுந்த வேளையில் நாம் யா/ வைத்திஸ்வராக் கல்லூரியில் பல செயலமர்வுகளை நடாத்தினோம். அதிபரின் பால் எமக்கு இருந்த அன்பும் பெருமதிப்பும் பன்மடங்கு உயர்ந்து விட்டது.

1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வணிகத்துறைப் பாடங்களுக்கென இருந்த ஒரு சில பிரபலமான ஆசிரியர்களில் அதிபர்அவர்களும் ஒருவர் தனது முதல் நியமனத்தையே வசதியான இடத்தை நாடாது கல்வித் தேவையுள்ள இடத்தை நாடித் தீவகப்பகுதியில் தமது பணியை ஆரம்பித்தார். இலங்கையின் பாடசாலைக் கல்வித்துறை சார்ந்த சேவைகளில் ஆசிரியர், பகுதித்தலைவர், உபஅதிபர், பிரதிஅதிபர், அதிபர் என நிரற்படுத்தப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைகளை ஆற்றியதுடன் அதிபர் சேவைகளுக்கு பெருமை சேர்ப்பித்தார். வைத்தீஸ்வராக் கல்லூரியின் நீண்ட வரலாற்றில் இவரது சேவைக்காலம் பெருமைக்குரிய இடத்தைப் பெற்றுள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

இவரின் சேவைநலன் பாராட்டு மலருக்கு இவ் வாழ்த்துரையை வழங்குவதில் நான் பெருமிதம் அடைகின்றேன். அவரின் சேவைச் சிறப்பும் வைத்தீஸ்வராக் கல்லூரியின் புகழும் நிலைத்து இருக்கவேண்டும் என வாழ்த்தும் பல நல்ல உள்ளங்களுடன் நானும் இணைந்து கொள்கின்றேன்.

**திரு.ஆ.ராஜேந்திரன்**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் உலகின் சிங்கம்



யாழ்ப்பாணத்தின் கல்விப் பரம்பரியத்தில் குறித்துரைக் கப்படும் கல்லூரிகளில் ஒன்றான யா/வைத்தீஸ்வராக் கல்லூரியின் புகழ்பூத்த ஆசிரியர்களின் வரிசையில் மதிப்பிற்குரிய அதிபர் திரு.நா.வன்னியசிங்கம் அவர்கள் தனது உயர்ந்த சேவையை நிறைவு செய்து ஓய்வு பெறும் இவ் வேளையில் அவர் தம் சேவை நலனைப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். சிறந்த நிர்வாகிக்குரிய ஆளுமைத்திறனும், யாரையும் கவர்ந்திழுக்கும் இயல்பும், பிறருக்கு உதவும் பரோபகாரமும், விருந்தோம்பலில் மேன்மையும் கொண்டு நட்புக்கு இலக்கணமாக விளங்கி பேருக்கேற்ற மிடுக்குடன் தன் கடமைகளை ஆற்றியவர் அதிபர் திரு. நா. வன்னியசிங்கம்.

கல்லூரியின் மாணவர் கல்வி மேம்பாட்டிற்காக ஆசிரியர் மற்றும் பௌதீக வளங்களை ஒன்றிணைத்து முகாமைத்துவச் செயற்பாட்டை வழி நடாத்துவதில் வல்லவராகத் திகழ்ந்தார். கல்லூரியின் பாரம்பரியத்திற்கேற்ப சைவசமய ஒழுக்க விழுமியங்களைக் கல்லூரிக் கோயிலில் நித்திய பூஜைகளினை நிறைவேற்றவதன் மூலம் பேணிக் காத்து வளர்த்து வந்தவர். கல்லூரியின் வளர்ச்சி குறித்து எந்நேரமும் சிந்தித்துச் செயலாற்றுபவர்.

எமது வலயத்தில் நடைபெறும் சகல நிகழ்வுகளிலும் கலந்து கொள்வதுடன், அவை சிறப்புற நடந்தேற உதவுபவர். இவருடைய சேவைக்காலத்தில் இக் கல்லூரி கண்ட வளர்ச்சிக்கு இவரது தலைமைத்துவ ஆற்றலும், வழிகாட்டலும் பங்களிப்புச் செய்துள்ளன எனக் கூறுதல் மிகையல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தனது பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்துவிட்டு யாழ். பிரதேசத்தில் நீண்டகாலம் கணக்கியல் பாடத்தில் பிரபல ஆசானாகத் திகழ்ந்து பல மாணவர்களது உயர்வுக்கு வளம் சேர்த்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரது இத்தகைய நற்பண்புகளுக்கமைய இவரது எச்சங்களான பிள்ளைகளும் உயர்கல்வியில் சிறந்து விளங்குகின்றனர். உற்றார், உறவினர் நலன் பேணுவதிலும் மிக்க கரிசனை கொண்டவர் என்பதுடன் இவரது சேவைக்குப் பின்னரான காலத்தில் தனது குடும்பத்தாருடன் நலம் பல பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.

"தோன்றிற் புகளொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று."

திரு.த.இராசலிங்கம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "அரிய அதிபர், இனிய நண்பர்"
## (யாழ்ப்பாணக் கல்லூரிக் கோட்ட முன்னாள் பணிப்பாளரின் உதிர்வுகள்)



பதவியால் அலங்கரிக்கப்படுவோர் பலர், பதவியை அலங்கரிப்போர் சிலர், கொண்ட பதவியையும், பாரினையும் தம்மால் அலங்கரிப்போர் சிலரில் சிலர், அச்சிலரில் சிலராம் தன்மை பெற்று யாழ்ப்பாண கோட்ட அதிபர் சங்கத் தலைவராய் திகழ்ந்தவர். உயர்திரு.நா.வன்னியசிங்கம் ஆவார். வைத்தீஸ்வராக் கல்லூரியை, கல்லூரிக்குக் கல்லூரியாய், ஆலயத்துக்கு ஆலயமாய் வளர்த்தெடுத்த பெருமையும் அதிபர் வன்னியசிங்கத்துக்கே உரியது. எனது கோட்டத்தில் நான் கடமைபுரிந்த காலத்தில் 23 பாடசாலைகளிலும் காலையில் தினமும் முந்தித் திறக்கப்படும் பாடசாலையும் மாலையில் பிந்தி மூடப்படும் பாடசாலையும் இதுவேயாகும். எனது அலுவலகம் இப்பாடசாலையிலேயே இயங்கியதால் இதனை நான் நன்கறிவேன். இவ்வாலயத்தின் பிரதான மண்டபம், நூலகம் போன்றன கோட்ட அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட்ட வேளைகளில் பொறுப்புடன் உதவிய நல்லுள்ளம் படைத்த அதிபரை இவ்வேளை நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.

கோட்டத்தில் அக்காலகட்டத்தில் அரசியல், பொருளாதார சிக்கல்கள் தோன்றியவேளை எல்லாம் தோள்கொடுத்து உதவிக்கரம் நீட்டிய நேசர் இவர். இவ்வித்தியாலயத்தின் அதிபர் சேவைக்காலத்தில் தன் வாழ்நாளில் பெரும் பகுதியை இவர் தனது வைத்தீஸ்வர வித்தியாலயப் பணியிலேயே இணைத்திருப்பார் என்றே எண்ணுகிறேன். இதனாலன்றோ Light House ஆனது வைத்தீஸ்வரா. கோட்டமட்ட, வலயமட்ட தமிழ்த்தின, ஆங்கிலத்தின, ஆக்கத்திறன் போட்டிகள் பல இவ்வித்தியாலயத்தில் சிறப்புற நடந்தேற முன்னின்று உழைத்த உத்தம சேவகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தீஸ்வரர் ஆலயத்தின் திருவிழாக்கள் மட்டுமன்றி, திருக்கேதீஸ்வர 4ம் நாள் பூசை வழிபாடுகளையும் அன்னதானச் செயற்பாடுகளையும் செவ்வனே செய்து முடிக்கும் செயல் வீரனும் பக்திமானுமாவார். சாதனைகள் மத்தியில் இவர் சந்தித்த சோதனைகளும் மறக்க முடியாதன. சளைக்காத மனஉறுதியுடன் உழைத்து உண்மையை வெல்லவைத்த உத்தம அதிபர்.

தனிப்பட்ட ரீதியில் எனது இனிய நண்பர். உடன் பிறவாச் சகோதரன். சோர்வு காணாது நான் சுறுசுறுப்புடன் இயங்க உந்திய எந்திரி. நல் மந்திரி. எனது ஆக்கங்களான "அரியை மாற்றிய நரியாத்தா", "தங்கன் கைக்கூ 101" என்ற இரு இலக்கிய நூல்களை என்னை எழுத வைத்த பிரமதூதன். மொத்தத்தில், கோட்டத்தை போஷித்த அதிபர் கோமகன், உழைப்பால் உயர்ந்த உத்தமன். அன்பாய் அரவணைத்த அன்பர்க்கு அன்பன். என் இனிய நண்பன்.

வைத்தீஸ்வரா கண்ட நல்ல அதிபர் முத்துக்களில் ஆணிமுத்து. அகவை அறுபது காண்பதால் அரச சேவையால் ஓய்வு, உண்மை உழைப்பாளிக்கு ஓய்வா? அது யதார்த்த மான உணர்வா?

"ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை
ஆணைகள் இட்டே யார் தடுத்தாலும் அலைகடல் ஓய்வதில்லை"

வாழ்க நீ ! வளர்க பல்லாண்டு உன் பணிகள் !

**திரு. எஸ். எஸ். தங்கராஜா**
**யாழ்ப்பாண முன்னாள் கோட்டக்கல்விப்**
**பணிப்பாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சா நெஞ்சமுடைய எங்கள் அதிபர்



அகவை அறுபதை நிறைவு செய்து மணிவிழாக்காணும் எமது அன்புக்குரிய அதிபர் திரு. நாகலிங்கம் வன்னியசிங்கம் அவர்களை இந்த வேளையில் வாழ்த்தி நிற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ்ப்பாண மண்ணின் மிகப் பெறுமதி மிக்க சொத்தாக விளங்கும் கல்விப்புலத்தில் ஒரு காலத்தில் சிறந்த கணக்கியல் ஆசானாக விளங்கிய திரு. வன்னியசிங்கம் அவர்கள் மிக முக்கிய கல்லூரிகளில் ஒன்றான வைத்தீஸ்வராக் கல்லூரியின் பெறுமதி மிக்க அதிபர் ஸ்தானத்தையும், அதன் மகிமை குன்றாது அலங்கரித்து நின்றாரெனின் அது மிகையாகாது.

கடந்த ஒரு தசாப்தகால ஆண்டுகளுக்கும் மேலாக யாழ்ப்பாணக் கோட்ட அதிபர்களுள் ஒருவராக எனக்கு நெருங்கிய அறிமுகமாகி சிறந்த சகபாடியாகவும் அன்பனும், பண்பாளனுமாக எவ்வேளையிலும் இன்முகத்துடன் கூடவே இருந்து கோட்டத்தின் பல்வேறு பணிகளுக்கும் உதவிகள் பல புரிந்து தனது வித்தியாலயத்தின் மேம்பாட்டிற்காகவும், தன்னை அர்ப்பணித்து அயராது உழைத்து நின்றவர்.

"வெள்ளத்தனைய மலர் நீட்டம் அவர்தம் உள்ளத்தனையது உயர்வு" என்பதற்கிணங்க மிக்க செயற்திறன் கொண்டு மாணவ சமூக மேம்பாட்டிற்காக உழைத்து நின்றவர். ஆசிரியத்தின் ஆரம்பப் பணியை உயர்தர மாணவர்களுக்கு தனியார் கல்வி நிறுவனங்களில் தலைசிறந்த ஆசானாக ஆரம்பித்து ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் ஆசிரியராக அரசாங்கப் பணியை ஏற்றுக் கடமையில் உள் நுழைந்தவர். 1987ம் அண்டு முதல் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியின் கணக்கியல் ஆசிரியராகப் பணியை ஏற்று அவரிடம் காணப்படுகின்ற தனித்துவமான சிறப்பியல்புகள், தலைமைத்துவப் பண்புகள் காரணமாகப் படிப்படியாகத் தனது பணியில் பகுதித் தலைவர், உபஅதிபர், பிரதி அதிபர் என்னும் பதவிகளில் உயர்ந்து 1998ஆம் ஆண்டு தொடக்கம் "கல்லூரியின் அதிபர்" என்னும் பதவியை அலங்கரித்து நின்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடைய பதவிக்காலத்தில் எத்தனையோ சோதனைகள், வேதனைகள் வந்துற்றபோதும் தன்னிலை குன்றாது எவ்வித சலனமுமின்றி தான் ஒரு நேர்மையான பணியாளன் என்பதை நிரூபித்தவர்.

தன்னுடைய தலைமையினாலும், அனுபவத்தினாலும் சிறந்த அதிபராகத் தனது கல்லூரியின் சகல வளர்ச்சிப் படிகளுக்கும், அடிக்கல்லாக நின்றதுடன் கல்வி வலயத்துடன் நெருங்கிய தொடர்புகளை மேற்கொண்டு பெருமதிப்புக்குரியவராக இருந்தார். யாழ். கோட்ட அதிபர் சங்கத்தின் தலைவராக இருந்து சகல அதிபர்களையும் வழிநடத்திச் சென்றுள்ளமை இவருடைய திறமையைப் பறைசாற்றுகின்றது. கடந்த பல ஆண்டுகளாக யாழ். கல்விக்கோட்டம் அவருடைய வித்தியாலய வளாகத்தினுள்ளே அமைந்திருந்தது. தனது பணிக்காலத்தில் மூன்று கல்விக்கோட்ட அதிகாரிகளுடனும் எவ்வித மாறுபாடுமின்றி அனைத்துப் பணிகளிலும் உற்ற துணையாக விளங்கியமையை மிக்க நன்றியறிதலுடன் இந் நேரத்தில் நோக்குகின்றேன். அவை மட்டுமன்றி தனது கல்லூரி ஆசிரிய குழாமாயினும், கோட்ட அதிபர் குழாமாயினும் அனைத்துப் பேரினதும் நன்மை தீமைகளில் கலந்து நின்று தான் ஒரு சிறந்த சமூகத் தொண்டனாகவும் விளங்குகின்றவர். இத்தனை சிறப்புக்கும் உரிய அதிபர் அவர்கள் கல்விப் புலத்திலிருந்து ஓய்வு பெறுகின்றார் என்பது மனதுக்கு வேதனையாக இருந்த போதும் அவரது கல்விப்பணி தொடர்ந்தும் எம் மாணவர்களுக்கு ஏதோ ஒரு வழியில் கிட்ட வேண்டும் என்று விரும்புகின்றேன்.

அறுபது வருட காலம் என்பது ஒரு காலச்சுற்றாகக் கருதப்படுகின்றது. இந்த நீண்டகாலத்தை எவ்வித குறையுமின்றி வாழ்ந்து முடித்த அதிபர் அவர்களை, அவருடைய மணி ஆண்டினை நினைத்து விழா எடுக்கின்ற இவ் வேளையில், அவரும் அவர்தம் மனைவியும் மலரும் மணமும் போன்று இனியும் வாழ்ந்து தம் குடும்பம், சுற்றம் எனப் பெருவாழ்வு வாழவேண்டுமென வாழ்த்தி நிற்பதுடன், அவர் இதுவரை வாழ்ந்த வாழ்வுக்காகவும், இனிவரும் கால வாழ்வுக்காகவும் வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரப் பெருமானை இறைஞ்சி நிற்கின்றேன்.

**திருமதி.வ.சிவபாலன்**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகன் "வன்னி" அவர்கள் கல்விப்புல மாந்தருக்கு ஒரு "விடி வெள்ளி"



"வன்னி" சேர்என்றால் இலங்கையின் பல பாகங்களிலும் வாழும் கல்விப்புலம்சார் உள்ளங்களுக்கு உடன் ஞாபகம் வருவது "எங்கட கணக்கியல் பாட சேர்" என்பது தான். நீண்டகாலம் கணக்கியல் பாடக் கற்பித்தல் துறையில் கொடிகட்டிப் பறந்த வன்னி அவர்கள் நிர்வாகத்துறையில் காலடி எடுத்து வைத்ததன் பின்னர் அதிலும் தனக்கென தனியான முத்திரை பதித்த உயர் பண்பாளனாக அமைவது அனைவருக்கும் கிடைக்காத தொன்றாகும்.

கல்வித்துறையில் 34 ஆண்டுகளுக்கு மேல் சேவைசெய்து மணிவிழாக்காணும் வன்னி அவர்கள் அலங்கரித்த துறைகள் பல. இந்த வகையில் 13 வருடங்கள் ஆசிரியராகவும், இரு வருடம் பகுதித் தலைவராகவும், மூன்று வருடங்கள் உப அதிபராகவும், நான்கு வருடங்கள் பிரதி அதிபராகவும், 12 வருடங்கள் அதிபராகவும் சேவை செய்து ஓய்வு பெறுவது மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைந்த தொன்றாகும்.

கொத்தணி இருந்த காலத்திலும் சரி, கோட்டம் இருந்த காலத்திலும் சரி மிக நீண்ட காலம் அதிபர் சங்கத் தலைவராக இருந்து சேவை செய்த உத்தமராக வன்னி விளங்கினார் என்பது பலரது மனங்களைப் பெருமை கொள்ள வைத்தபோதும் சிலரது மனங்களின் காழ்ப்புணர்வுகளையும் கண்டறிய வைத்தது.

மன உணர்வில் வானத்தை ஒத்த வன்னியசிங்கம் அதிபர் அவர்கள் கல்வி, நிர்வாகச் சட்டதிட்டங்களை நன்கு கற்றுத் தெளிந்த ஒருவராக செயற்பட்டமை அவரது தொழிலின் சிறப்புக்குக் காரணமாக அமைந்தது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன உறுதியில் சிங்கத்தை ஒத்த வன்னி அவர்கள் சிறந்த கல்வி, நிர்வாகம் நடைபெறும் பாடசாலைகளில் வைத்தீஸ்வராக் கல்லூரியும் ஒன்றென அதிகாரிகளினால் பேசக்கூடியளவிற்கு வளர்த்துவிட்டுச் செல்வது தொடர்ந்து பாடசாலையை வளர்த்துச் செல்பவர்களுக்கு இலகுவை ஏற்படுத்தி இருப்பது வன்னிக்குரிய பெருமையாகும்.

கல்வித்துறையிலும், இணைப்பாடவிதானத்துறையிலும் கல்லூரிக்குப் பெருமை தரக்கூடிய விதத்தில் வளர்ந்திருப்பது மணிவிழாநாயகனுக்குரிய பெருமையாகும். மாணவர்களை நாட்டுக்கேற்ற நற்பிரஜைகளாக வளர்ப்பதிலும், ஆசிரியர்களைக் கட்டுக்கோப்புடன் வளர்ப்பதிலும் தனக்கெனத் தனியான பாணிகளைக் கொண்டிருந்தமையே அவரது பெருமைக்கு அணிசேர்ப்பதாக அமைந்தது.

இவரது காலத்தில் கல்லூரியின் பௌதீக வளத்துறையும், சிறப்பான உயர்நிலையினைப் பெற்றமைந்தது எவரும் மறுக்க முடியாதது. காலையில் நேரத்துடன் வருகைதந்து மாலையில் நேரம் பிந்திச் செல்வதும் அதிபர்கள் சிலரில் ஒருவராகத் திகழ்ந்த வன்னி அவர்கள் ஓய்வுக் காலத்தில் நோய் நொடிகள் இன்றி நிறைந்த ஆரோக்கியமும், சந்தோசமும் கொண்டவராகத் திகழ எல்லாம் வல்ல வீரமாகாளியம்பாள் அருள் கிடைக்க வேண்டும் என வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு.வீ.சி.மாணிக்கராசா**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்**
**நல்லூர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்திரு.நாகலிங்கம் வன்னியசிங்கம் அவர்களின் மணிவிழாவுக்கான வாழ்த்து



1. அன்பினால் அறிவினால் ஆற்றல் மிகு உழைப்பினால்
நண்பினால் நல்லவர்நல் லாசியால் – என்றுமே
வற்றாத அருவிபோல் வன்னியசிங் கப்பெரியோய்!
பொற்றாமரை யாய்வாழ்க பொலிந்து.

2. கல்வியாஞ் செல்வத்தாற் கற்றவர் மெச்சுகின்ற
நல்லா சிரியன், அதிபரென வல்லோனாய்
ஆண்டுகள் முப்பதுடன் நான்குமாய் ஆற்றுபணி
ஈண்டுலகில் வாழியவே இனிது.

3. கொக்குவில் கிராமத்தின் குடிநலஞ்சேர் தம்பதி
மிக்ககுண நாகலிங்கம், கமலாட்சி தக்கமகன்
வன்னிய சிங்கம் வந்துதித் தானென்று
உன்னியே வாழ்த்திய துலகு.

4. ஐம்பதா மாண்டு ஐந்தாம் மாதம்
அம்புவியிற் றேதி பதினெட்டில் – "நம்பி" யவன்
பிறந்தான, மொழிபயின்று பிறைநிலாப் போல் வளர்ந்தான்
குறைந்திடா தமுதக் குணம்.

5. ஊர்காவற் றுறையுறை உயர்சென் அன்ரனீஸ்
உன்னதக் கல்லூரி யாசானாய்ப் – பேர்காத்து
பதினோ ராண்டுகள் பயன்கல்வி விளைவித்த
அதிசீ ராளுமை வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பிஎஸ்சி யுடன்கல்வி டிப்புளோமாப் பட்டமும்
பெருமை யுறப்பெற்ற பேராண்மை வீறெய்தி
கணக்கியற் றுறையில் கால்நூற் றாண்டுபுகழ்
வணக்கத்துக் குரியவரே! வாழ்க!

7. எண்பத்து ஏழாண்டில் இடமாற்றம் பெற்றுவண்ணைப்
பண்பட்ட வைத்தீஸ்வராப் பணியேற்றும் – பின்பற்றி
பன்னீ ராண்டுகள் பலமிக்க அதிபராய்
என்னீ ரியற்றிய அறம்.

8. கோட்டக் கல்வி யதிபர்கள் சங்கத்தின்
நாட்டமுறு தலைவராய் நலஞ்செய்து – றோட்டரிக்
கழகத்தின் உபதலைவர் கடமையிலு மீடுபட்ட
பழகுவதற் கினிமையுன் பண்பு.

9. இல்லாள் லோகேஸ்வரி இனியமூன்று பிள்ளைகள்
நல்லார் மருமகனும் நலமுறவே! – எல்லாமும்
எண்ணில் வளம்பெருக இனியமணி விழாப்பொலிக!
மண்ணில் வாழ்கபல் லாண்டு.

10. அகவைகள் அறுபது ஆகிவிட்ட போதிலும்
இகமதில் ஈசன் அருளினால் – மிகவுயர்ந்து
ஆள்கவுன் இல்லறம், அமைதியும் சூழ்கவே!
வாழ்கநீ டூழியாய்! வாழி!

**கலாநிதி, பண்டிதர், சைவப்புலவர்,**
**தலைவாரிதி செல்லையா திருநாவுக்கரசு**
B.A, M.A. Med. Ph.D,
Dip-in-Edu, Dip-in-mg,
SLPS 2 - I, SLEAS Class III



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாளில்
## மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் வைத்தீஸ்வராக் கல்லூரியின் கல்விப்பணியில் தொண்டாற்றி அகவை 60 ஆற்றி ஓய்வு பெற்று இன்று மணிவிழாக்காணும் அதிபர் நாகலிங்கம் வன்னியசிங்கம் அவர்களின் விழாவுக்கு வாழ்த்துச் சொல்வதற்குக் கிடைத்த வாய்ப்பை இட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

கணக்கியல் பாடத்துறையில் புகழ்பூத்த ஆசிரியராக விளங்கியவர். 01.05.1976ல் முதல் நியமனம் பெற்று 11 வருடயங்கள் யா/புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்றுறையில் புகழ்பூத்த ஆசிரியராகப் பணியாற்றி தீவக மாணவர்களின் கல்விக்குத் தொண்டாற்றியவர். அக்காலத்தில் கணக்கியல் பாடத்தின் யாழ். மாவட்ட முதன்மை ஆசிரியராக விளங்கினார்.

15.09.1987ல் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் தன்னை இணைத்துக் கொண்டவர். இவருடைய பணி ஆசிரியராக, பகுதித் தலைவராக, உப அதிபராக, பிரதி அதிபராக, அதிபராகப் படிப்படியாக உயர்ந்து வைத்தீஸ்வராக் கல்லூரி இன்றுவரை நிலைக்கும் அளவிற்கு கல்லூரியின் அபிவிருத்திக்காக உழைத்து 18.05.2010ல் ஓய்வு பெறுகிறார்.

கல்லூரியின் அமைவிடச்சூழல் புகழ்பெற்ற வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் அமைந்துள்ளது. இக்கல்லூரியானது சைவத்திற்கும், தமிழிற்கும் தொண்டாற்றி வருவது முக்கியமான விடயமாகும். யாழ்ப்பாண நகரத்தில் புகழ்பூத்த கல்லூரியாக இது விளங்குவது புகழ்பூத்த அதிபர்கள் இக்கல்லூரியை வழிநடத்தி வந்துள்ளமையை வரலாறு சொல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல்ய கல்லூரியில் அனுமதிக்காகச் செல்லும் இன்றைய சூழலில் பிரபல்யக் கல்லூரிகள் உள்வாங்காத மாணவர்களை அனுமதித்து கல்வி வழங்கும் கடவுள்பணியைச் செய்து வருகின்றமை இக்கல்லூரிக்கு பெருமைதரும் விடயமாகும். இக்கல்லூரியினை ஒரு சவாலாக எடுத்து அதனை அபிவிருத்தி செய்தமை அதிபரின் செயல்திறனுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவர் கல்விப்பணி மட்டுமன்றி பல்வேறு சமய, சமூகப் பணிகளிலும் தன்னை இணைத்துக் கொண்டு தமது ஆளுமையை வெளிப்படுத்தி நின்றவர். 1978–1986 காலப்பகுதியில் யாழ்ப்பாணத் தொழில்நுட்பக் கல்லூரியின் விரிவுரையாளராகக் கடமையாற்றிப் பல்வேறு மாணவர்களின் கல்வி விருத்திக்கு உழைத்தவர். யாழ்ப்பாண வலயத்தில் அதிபர் கழகத் தலைவராக இருந்து அதிபர்களின் நலன்களிலும், அக்கறை காட்டியவர். மேலும் யாழ்ப்பாண றோட்டரிக் கழகத்தின் உபதலைவராகவும், யாழ்ப்பாண வலய மட்டத்திலான பரீட்சைச்சபை உறுப்பினராகவும் இருந்து பணியாற்றியவர்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் நீண்டகால உறுப்பினராக இருந்து சமயப்பணியாற்றியவர். 1999 இலிருந்து தேசிய கல்வி நிறுவனத்தின் விரிவுரையாளராகப் பணியாற்றினார். மேலும் கூட்டுறவுத்துறையிலும் தனது பணியை மேற்கொண்டவர். நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 15ம் கிளையின் தலைவராகப் பணியாற்றி மகிழ்ச்சிகரமாகச் சேவை செய்தார். ஆலயத் தொண்டுகளிலும், இவர் தனது பணிகளை ஆற்றியவர். தாவடி முருகன் ஆலய நிர்வாகசபை உறுப்பினராக இருந்து அவற்றின் வளர்ச்சிக்காகப் பணியாற்றியவர். உண்மையில் கல்விமான்களின் ஓய்வு என்பது நிர்வாக விதிகளுக்கு மட்டுமேயன்றி கல்விப்பணிக்கு எப்போதுமே ஓய்வு கிடையாது. அந்தவகையில் இவரது கல்விப்பணியும் தொடரவேண்டும் என மணிவிழாவில் வாழ்த்துகின்றேன்.

**பொன்.அருணகிரிநாதன்**
**அதிபர்**
**யா/வேலணை மத்திய கல்லூரி**
**வேலணை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு
# திரு .நா.வன்னியசிங்கம் அதிபர்

சேவையால் உயர்ந்து சீரிய பண்பினைப் பெற்று மனதில் அழியா இடம்பெற்ற அதிபர் நா.வன்னியசிங்கம் அவர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர். இவர் தனது கல்விச்சேவையை யா / புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்றுறையில் ஆரம்பித்தார். இவர் அக்காலத்தில் அதிசிறந்த கணக்கியல் ஆசானாக யாழ் மாவட்டத்தில் பிரசித்தி பெற்றிருந்தது மட்டுமன்றி பல மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிய பெருமையும் இவருக்கு உண்டு. இவரது பதினொரு ஆண்டு கால கல்விப்பணியை தீவகமக்கள் இன்றும் பாராட்டுவதை நினைவு கூரலாம்.

1987 இன் இறுதியில் இவர் வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்தார். இவர் இக்கல்லுரியில் ஆசிரியராக, உபஅதிபராக, பிரதி அதிபராக, அதிபராக, உயர்வு பெற்றதோடு, கல்லூரியையும் யாழ் வலயத்தில் உயர்ந்து நிற்கச் செய்துள்ளார். இவை மட்டுமன்றி கல்லூரி சேவையுடன் யாழ் கோட்டத்தில் நடைபெற்ற போட்டி நிகழ்வுகளிலும், விழாக்களிலும், பரீட்சைகளிலும் பங்கு கொண்டதோடு அவற்றைத் திறம்பட நடாத்திய பெருமையும் அதன் சங்கத்தலைவராக இருக்கும் இவருக்கு உண்டு.

சிறந்த இறைபக்தியுடைய இவர் சிவனுக்குரிய விசேட நாட்களில் பாடசாலையிலுள்ள ஆலயத்தில் அபிடேகம், ஆராதனைகள் நடைபெற ஒழுங்கமைத்துக் கொடுத்தார். கல்விப் பணிக்கு மேலாக சமுகப்பணிகளிலும் ஈடுபடுவதில் ஆர்வம் காட்டிடுபவர். இத்தகைய சிறந்த பண்புகளையுடைய அவர்பணி தொடர்ந்தும் கல்விச்சமுகத்திற்கு கிடைக்க வேண்டுமென கேட்டு ஓய்வு காலம் சிறப்பாக மகிழ்வாக அமைந்திட இறைவன் அருள் வேண்டுமென வேண்டி வாழ்த்துகின்றேன்.

**த.சோமசேகரம்**
**அதிபர்**
**யா / கொட்டடிநமசிவாய வித்தியாலயம்**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேன்மை கொள் பணியாளன்



மனிதன் பிறப்பதும், வாழ்வதும் இறப்பதுவும் உலக நியதி தான். வாழுங்காலத்தில் பல்வேறு போராட்டங்கள், கஷ்டங்கள் மத்தியில் அவன் வாழ்கின்றான். அவ்விதமான வாழ்க்கையின் போது அவனது பணி வாழ்வு ஆரம்பமாகின்றது. அப்பணி வாழ்வு எந்தளவு அவனுக்கும் சமூகத்திற்கும் பயனுள்ளதாக அமைந்தது என்பது அவனது முயற்சி, திறமையையும் சமூகத்தின் ஒத்துழைப்பையும் பொறுத்தது எனலாம். அந்தவகையில் தான் பணிபுரிய ஏற்ற துறையாகக் கல்விப்புலத்தைத் தேர்ந்தெடுத்து அதில் ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றி நிறைவும் கண்டுள்ளார் திரு. நா. வன்னியசிங்கம் அவர்கள். அதேசமயம் கல்விப்புலத்துடன் மட்டும் நின்றுவிடாது சமூகத்தின் பல்வேறு நிலைகளிலும் தன்னை ஈடுபடுத்தி சமூகப் பணியையும் அவர் ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது. அவரது பணிவாழ்வைப் பல்வேறு கோணங்களில் காணக்கூடியதாக உள்ளது.

**கல்விப் புலத்தின் சிறந்த பணியாளன்**

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்பதில் கவர்ச்சி கொண்டு ஆசிரியப் பணியை மேற்கொண்ட திரு. வன்னியசிங்கம் அவர்கள் தான் ஏற்ற பணியைச் செவ்வனே செய்து பேரும் புகழும் பெற்றார். 1976ல் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் பத்தாண்டுகால ஆசிரியப் பணியிலும் 1987ல் வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்த வேளையிலும் வர்த்தகப் பிரிவில் சிறப்பாகக் கணக்கியல் கற்பிப்பதில் தனக்கென ஒரு தனியிடத்தைச் சமைத்துக்கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூகப் பணியாளன்**

பொதுவாக அதிபர்கள் பலர் தம் கல்லூரியின் பாரிய வேலைப் பளுவாலும் தம் குடும்ப வேலைகளின் நிமித்தமும் தமது பணியைக் கல்லூரியுடனும், குடும்பத்துடனும் நிறுத்தி விடுவதுண்டு. ஆனால் அதற்கு மாறாகத் திரு. வன்னியசிங்கம் அவர்கள் தன் நேரத்தின் பெரும்பகுதியைக் கல்லூரி நலனுக்காகச் செலவிட்ட அதேவேளை சமூகப்பணிகளுக்குமாக தன்னை அர்ப்பணித்தார்.

**சமயக்காப்பாளர்**

திரு.நா.வன்னியசிங்கம் அவர்கள் மத அனுட்டானங்களுக்கு மதிப்பளிக்கும் ஒரு நல்ல ஆன்மீகவாதியாவார். அன்றுதொட்டு சைவசமயப் பாரம்பரியங்களை, விழுமியங்களைக் கட்டிக் காத்துவரும் தன் கல்லூரியைத் தொடர்ந்தும் அதற்கு மதிப்பும் முன்னுரிமையும் கொடுத்து வழிநடாத்தி வருவது இதற்கு நல்ல சான்றாகும். உரிய காலங்களில் மதச்சடங்குகளை, வழிபாடுகளை நடாத்தி ஆசிரியரையும் மாணவரையும் வழிநடத்தி வந்துள்ளார்.

**சிறந்த நண்பர்**

திரு. நா. வன்னியசிங்கம் அவர்களுக்கு நண்பர்கள் அதிகம் என்று தான் கூறலாம். அவர் கல்லூரியில் ஆளுமையும் கண்டிப்பும் உள்ள அதிபராக ஒரு புறம் விளங்கினாலும் மறுபுறம் பழகுவதற்கு ஏற்ற இனிய நண்பராவார். கல்லூரியிலும் சரி, வெளி இடங்களிலும் சரி நட்புடன் பழகும் அதிபர் அவர்களின் தலைமையில் நடைபெறும் வைபவங்களில் பலரை நாம் சந்திக்கக் கூடியதாக இருப்பதை இதற்கு உதாரணமாகக் கூறலாம். சமூகப்பணி வளர வேண்டும் என்றும் அவரும் அவர் தம் குடும்பத்தினரும் பல்வேறு வளங்களுடன் வளமாக வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

**திருமதி.பி.எவ்.சின்னத்துரை,**
**அதிபர்,**
**கலைத்துறை அழகியற் கல்லூரி,**
**திருமறைக்கலாமன்றம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அதிபரின் வாழ்த்து

யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபராக இருந்து அரும்பணியாற்றிய திரு.நா. வன்னியசிங்கம் அவர்களின் பணி நயந்து நன்றி நவிலும் கல்லூரி சமூகத்தினர் வெளியிடும் பாராட்டும் மலருக்கு எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

1974 இல் காவலூர் புனித அந்தோனியார் கல்லூரியில் கல்விப்பணியை தொடங்கிய திரு வன்னியசிங்கம் அவர்கள் பிரபல்யமான கணக்கியல் ஆசிரியராக 10 வருடங்கள் இக் கல்லூரியில் பணி புரிந்தார். 1987 இல் இருந்து வைத்தீஸ்வராக் கல்லூரியில் இவரது பணி 23 வருடங்கள் பல்வேறு பதவிகளுக்கூடாகப் பரிணமித்து 12 வருடங்கள் இக் கல்லூரியின் அதிபராக நிறைந்த பணி புரிந்து ஓய்வு பெறும் இவ்வேளை அவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

இக்கட்டான காலகட்டத்தில் கல்லூரியை நேரிய வழியில் நெறிப்படுத்திச் சென்ற இவரது செயற்திறனும் ஆளுமைத் திறனும் வியந்து பாராட்டத்தக்கது. கல்விப்பணியுடன் பல சமூகப் பணிகளும் இவரது பணி பரந்து விரிந்து இருந்ததை யாம் அறிவோம். எந்தப் பிரச்சனைகளையும் சாதுரியமாக நிதானமாக அணுகும் விதத்தில் இவரிடம் தொடர்பாடல் திறன் மிகுந்திருந்தது.

நீண்ட பணி புரிந்த பணித்தளத்தில் இருந்து விடை பெறும் திரு.நா. வன்னியசிங்கம் அவர்கள் தொடர்ந்தும் உடல், உள வளத்துடன் சமூகப்பணிபுரிய இறை ஆசியை வேண்டிநிற்கின்றேன்.

அருட்திரு.ம.ஜெறோ செல்வநாயகம்
அதிபர்
புனித.பத்திரியார் கல்லூரி
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிப்பிற்குரிய அதிபர் திரு.நா.வன்னியசிங்கம் அவர்களின் அறுபது அகவைக்கான வாழ்த்துக்கள்



மதிப்பிற்குரிய அதிபர் அவர்கள் நல் ஆசானாக, பகுதித்தலைவராக, உப அதிபராக, அதிபராகப் பல வருடங்கள் கல்வித்துறையில் பணியாற்றிய ஒருவர். மாணவரது அறிவு, ஆற்றல், ஆளுமை என்பவற்றை மேம்படுத்துவதில் மிகவும் ஈடுபாடும் அக்கறையும் உடையவர்.அதற்காக அயராது உழைப்பவர் தான் ஏற்றுக்கொண்ட பணியினைச் செவ்வனே திறம்பட ஆற்றுபவர் ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் என்றும் உறுதுணையாக விளங்குபவர். பாடசாலையின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் தன்னை அர்ப்பணித்த ஒருவர். மதிப்பிற்குரிய அதிபர் அவர்களது வழிகாட்டலில் உயர்நிலையை அடைந்து மேம்பட்டவர் பலர். அதிபர் அவர்களது மேற்பார்வையும் வழிகாட்டலும் என்றும் நிலைத்து நிற்கும் இயல்புடையன. ஆளுமைமிக்க மாணவர்களை உருவாக்க வேண்டும் என்ற நேரிய நோக்கு, அதற்காகச் செயற்படும் பாங்கு, கடமை உணர்வு இவையெல்லாம் அவரிடம் காணப்பட்ட உயரிய பண்புகள். இத்தகைய மதிப்பிற்குரிய அதிபர் திரு.நா.வன்னியசிங்கம் அவர்களின் மணிவிழாவுக்கு வாழ்த்துச்செய்தி தெரிவிப்பதில் பெருமிதம் அடைகின்றேன். நல்லதொரு அதிபராக, குடும்பத்தின் தலைவனாக, பாசம் மிகுந்த தந்தையாக விளங்கும் மதிப்பிற்குரிய அதிபர் அவர்கள் நீண்ட காலம் நலம் பெற்று வாழ ஆண்டவனை வேண்டுகின்றோம்.


**திருமதி து. துஷிதரன்**

**அதிபர்**

**சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,**

**யாழ்ப்பாணம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

திருவாளர் வன்னியசிங்கம் அவர்கள் தலைசிறந்த ஒரு அதிபராக திகழ்ந்தவர். தன்னுடைய பணி வாழ்விலே பலவிதமான பணிநிலை ஒழுங்கமைப்புகளுக்கு ஊடாகப்பயணித்தவர். ஆசிரிய வாண்மைத்துறையில் சமுகமளித்த தலைசிறந்த ஆசானாகத் தன்னைப் பட்டை தீட்டிக்கொண்டவர். துறைசார் அறிஞனாக ஆசிரியப்பணியிலும் பின்னர் அதிபர் என்ற பணி நிலையிலும் கம்பீரமான ஆளுமைக் குரியவராவார். புகழ்பூத்த வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபர் பணியை அணி செய்த பெருமைக்குரியவர்.

அதிபர் பணியில் சுறுசுறுப்பும் காத்திரமான சிந்தனைப் பொக்கிசமும் உடையவராக வலம்வந்து ஆளுமையின் குறியீடாக அடையாளம் காணப்படுபவர் தலைசிறந்த நிர்வாகத்திறன் உடைய இவர் அதிபர் சங்கத்தின் தலைமைப் பணியை சிறப்பாக மேற்கொண்டார். ஏனைய அதிபர்களுடன் இனிமையாகப் பழகி நல்ல வழிகாட்டி நட்புரிமை சார்ந்த அணுகு முறைகளைக் கையாள்பவர். சரியான எவ்விடயத்தையும் தயங்காமல் எடுத்துச்சொல்லும் நேர்மைப் பண்பாளர். ஆசிரியர்கள், மாணவர்கள் பாடசாலைச் சமூகத்தினரோடு நல்லுறவைப் பேணி நிற்பவர்.

தனது பதவிக்காலத்தினை நல்ல முறையில் கடந்து சென்றாலும் தொடர்ந்து எமது சமூகத்திற்கு அவர்பணி வேண்டப்படுவதொன்றாகும். தொடர்ந்தும் சமூகப்பணியினூடாகக் கல்விச் சமூகத்திற்கு அவர்பணி தொடர அதிபர் அவர்கள் நற்சுகத்தோடு வளமான வாழ்வு வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

Sr.M.T.Ladislaus Principal
J/Holy Family Convent,
Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச் செய்தி



தமிழ் மக்களின் அரும்பெருஞ் சொத்து கல்வி அதனை பேணிக்காக்க "ஆசிரியப்பணியே அரும்பணி அதற்கே உன்னை அர்ப்பணி" என்ற முதுமொழிக்கு இணங்க திரு.நா.வன்னியசிங்கம் அவர்களின் 34 ஆண்டு கல்விச் சேவை 1976 இல் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் ஆரம்பித்து 1977 முதல் யாழ் நகரில் புகழ் பூத்த கல்லூரிகளில் ஒன்றாக திகழும் வைத்தீஸ்வராக்கல்லூரியில் வணிக ஆசானாக கடமை ஏற்று வண்ணை வைத்தீஸ்வரப்பெருமான் அருளாலும் தனது அயராத உழைப்பினாலும் படிப்படியாக பகுதித்தலைவர் உபஅதிபர் பிரதி அதிபராகி ஈற்றில் அதிபராகி தனது அறுபது அகவை அடைந்ததனால் ஓய்வு பெறுகின்றார்.

தித்திக்கும் தீந்தமிழால் எத்திக்கும் மணம் பரப்பி மாணவர் போற்றும் மாண்புடன் வணிகக்கல்வி கற்பிக்கும் ஆற்றல்லுடையவராய், செருக்கும் சினமும் சிறுமையுமின்றி கல்வித்தேன் ஊட்டி மாணவர் மத்தியில் நீங்காத இடம் பெற்றவர்.

ஒழுக்கமும் கல்வியும், உயிரும் உடலும் போன்றவை என்பதனை உணர்த்தி மாணவர்களின் அறிவுக்கண்களை திறக்க வழி வகுத்தார். அவரின் கல்விப்பணி, இக்கல்லூரி மட்டில் நிறைவுற்றாலும், அவரின் வணிகக்கல்விப்புலமை தமிழ் மக்களுக்கு தொடர்ந்தும் பயன் பெறவேண்டும் என்றும் மேலும் சமூகப்பணிகளிலும் இணைந்து தொண்டாற்ற முன்வர தாங்கள் பூரண உடல் நலத்துடன் பல்லாண்டு பல்லாண்டு வாழ வண்ணை வைத்தீஸ்வரப்பெருமானின் அருளை இறைஞ்சுகின்றேன்.

வாழ்க வளமுடன்

**வி.ஸ்ரீசக்திவேல் J.P**

**தவிசாளர்**

**யாழ்ப்பாணம் மத்தியஸ்தர் சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணக் கல்வி வரலாற்றில் பேரும் புகழும் பெற்ற கல்லூரிகளில் வைத்தீஸ்வராக் கல்லூரியும் ஒன்று. இக்கல்லூரி நாகமுத்து அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட காலங்களிலிருந்து இன்றுவரை அதன் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் நிறைவாகப் பல அதிபர்களைக் கடந்த 97 ஆண்டுகளில் கண்டு மகிழ்ந்தள்ளது.

அவர்களில் கடந்த 23 வருடங்களாக கணக்கியல் ஆசிரியராகப், பகுதித் தலைவராக, பிரதி அதிபராகப் பல பதவிகளில் கதிரையை அலங்கரித்து பாடசாலைக்கு நற்பணியாற்றிய எமது மதிப்பிற்கும், பெருமைக்குமுரிய அதிபர் அவர்கள் தன் உயர்ந்த சேவையை நிறைவுசெய்து, ஓய்வுபெறும் இவ்வேளையில் அவர் தம் சேவைநலன் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இவர் தம் கல்லூரிக் காலத்தில் ஏற்பட்ட போரின் கொடுமையாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் மாணவர்களின் கல்வி பாதிப்புற்ற போதிலும், மனம் தளராது கல்லூரி மாணவர்களது கல்வி வளர்ச்சியே தனது உயிர் மூச்சு என்று நாள் பூராவும் செயற்பட்டு கல்லூரி வளர்ச்சி கண்டு மகிழ்ந்தவர்களில் எங்கள் அதிபரும் ஒருவராவார்.

சிறந்த நிர்வாகிக்குரிய திறமையுடன், உயர்ந்த பண்பும் கொண்டவராக விளங்கிய எமது அதிபர் அவர்கள் ஆன்மீக ஒழுக்க விழுமியங்களை மாணவர்களுக்கு வழங்கி அதன்மூலம் ஓர் நல்ல பண்பான உயர்ந்த பிரஜைகளாகச் சமூகத்தில் மாணவர்கள் வலம்வர வேண்டும். என்ற நோக்கில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக் கட்டமைப்பில் பல கலைகளையும் கற்பிக்கும் ஒரு தளம் என்பதைக் கருத்தில் கொண்டு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் உட்பட கல்லூரிச் செயற்பாடுகள் யாவும் மிகத் திறமையாக அமைய வேண்டுமமெனச் செயற்பட்டவர். அத்துடன் எமது கல்லூரியில் நடைபெறும் ஒவ்வொரு விழாவும் அதாவது இல்ல விளையாட்டுப்போட்டி, முத்தமிழ்விழா, உயர்தர மாணவர் ஒன்றுகூடல், ஆங்கிலதினம், பரிசுத்தினம், நவராத்திரிவிழா, ஒளிவிழா போன்றவற்றை ஒவ்வொரு வருடமும் தவறாது நடைபெறச் செய்து, மாணவர்களின் ஆற்றல்களையும், செயற்திறனையும் வெளிக் கொணரச் செய்வதும் அதிபரின் நிர்வாகத் திறனே என்றால் மிகையாகாது.

எமது கல்லூரியில் முன்பு முன்னணியாக விளங்கிய விஞ்ஞானத்துறை இடையில் இல்லாது தடைப்பட்டு இருந்த போதும், மீண்டும் அதே நிலைக்கு வரச்செய்து, இரு மாணவிகளை உயிரியல் பிரிவிற்கும், ஒரு மாணவனைப் விவசாயப் பிரிவிற்கும் அனுப்பிய பெருமையும் எங்கள் அதிபரையே சேரும்.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்கள் எமது பாடசாலைக்கு வந்து தரம் 6ல் அனுமதி கேட்கும் போதெல்லாம் மனம் கோணாது தாராள மனத்தோடு அனுமதி வழங்கி அவர்களுக்கு முழுமையான கல்வி வழங்கப்பட வேண்டும் என்று ஆசிரியர்களுடன் கலந்துரையாடி ஆலோசனை வழங்கி நேரடியாகவே கண்காணித்து வருவார்.

கல்வி உலகிலே சிறந்த முகாமைத்துவத் திறனும், துணிச்சல் மிக்கவருமான ஒரு கல்லூரி முதல்வர் பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்வது எம் பாடசாலைச் சமூகம் எதிர்நோக்கும் பாரிய இழப்பாகும்.

எமது பாடசாலைக்காக அயராது மனம் சோராது உழைத்து தனது அறுபதாவது அகவையில் தடம் பதிக்கும் எமது அதிபர் அவர்களின் உயர்ந்த அளப்பரிய சேவையைப் பாராட்டுவதோடு ஓய்வு காலத்தில் அவரின் குடும்ப வாழ்வு சிறக்கவும், அவரது கல்விப்பணி எமது கல்லூரிக்குத் தொடர்ந்து கிடைக்கவும் இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**செல்வி. ச. சின்னத்துரை**
**பிரதி அதிபர்**
**யா/வைத்தீஸ்வராக் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்ணியங்கோடி தேடிய புண்ணியர் நாகமுத்து



"அறஞ்செய விரும்பு" என்பது தண்தமிழ்ச்செல்வி ஔவை மூதாட்டி அறிவுறுத்திச் சென்றுள்ள அர்த்தமுள்ள அறிவுரை. அவர் உணர்த்தியுள்ள அறம் ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்றல்ல எல்லாமாக முப்பத்திரண்டாகும். அகிலாண்ட நாயகியாகிய அன்னையே இந்த முப்பத்திரெண்டு அறங்களையும் காஞ்சியில் இருந்து செய்தார் எனப் புராணங்கள் பகர்கின்றன. இந்த முப்பத்திரெண்டு அறங்களுள் தலையாய அறமாக விளங்குவது எழுத்தறிவித்தலாகும். இதையே நம் பாட்டுக்கொரு புலவன் பாரதி சற்று விரிவாக,

"இன் நறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

எனக் கூறுகின்றான். ஏழைக்கு எழுத்தறிவிக்கத் தம்மை அர்ப்பணித்து புண்ணியங்கோடி தேடிய புண்ணியர் நம் மண்ணில் நல்லைநகர் தந்த நாவலார் இவர்களுக்கெல்லாம் இவ்வரும் பணிக்கு அடியெடுத்துக் கொடுத்தவர். ஏழைக்கு கல்வி, இலவசக்கல்வி, தாய்மொழிக்கல்வி, சமயக்கல்வி ஆகியவற்றுக்கு அரசு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்படுத்த முன்னரே அதாவது நூற்றாண்டுகளுக்கு முன்பே நாவலர் பெருமான் இவற்றுக்கு முதன்மை கொடுத்து அவற்றை வளர்த்தவர். நாவலர் பெருமான் வழியை அடியொற்றியே நம் கல்லூரியின் ஸ்தாபகர் திரு. நாகமுத்துவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்டார்.

.....அன்னாரின் செயற்பாட்டின் பயனே யாழ். நகர.... வண்ணை. சைவப்.... பெருமானின் அருளாட்சி..... வளர்ந்தோங்கி நிற்கும் எம் வைத்தீஸ்வராக் கல்லூரியாகும்.

**பிறப்பும், கல்வியும், தொழிலும்**

பெரியார் நாகமுத்து இயற்கை வளத்தோடு கல்வி வளமும் செழித்தோங்கும் இடைக்காடு என்னும் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1868ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏழாம் திகதி பிறந்தார். வண்ணார்பண்ணை மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட இவரது ஆரம்பக்கல்வி கந்தர்மடம் சைவப்பாடசாலையில் இடம்பெற்றது. அடுத்து யாழ். பரியோவான் கல்லூரியில் தனது ஆங்கிலக் கல்வியைப் பெற்றார். பின்னர் இந்தியா சென்று கல்கத்தாவில் பட்டப் படிப்பை மேற்கொண்டு கல்கத்தாப் பல்கலைக்கழகத்தில் F.A பட்டமும் Finer of Arts பெற்றார். இவரது தம்பிமார் அறிஞர் சரவணமுத்து M.A., M.Se. பட்டதாரி. பெரியார் நாகமுத்து 1895இல் கில்னர் கல்லூரியில் ஆசிரியராகப் பதவி ஏற்றார். இதன் பின்னர் 1910இல் யாழ். இந்துக் கல்லூரியில் ஆசிரியப்பணி ஏற்று விடுதி ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

இந்துக்கல்லூரியில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் பொழுது மாணவர் உள, உடல், கல்வி நலன்களில் மிகுந்த அக்கறை எடுத்ததோடு ஏழைப்பங்காளனான இவர் வறிய மாணவர்களுக்கு உதவுவதில் முன்னின்றார். ஏழைச் சிறார்களுக்கு உதவுதல், அவர்களுக்கு அனுமதி, அவர்கள் பராமரிப்பு ஆகிய விடயங்களில் இந்துக் கல்லூரியின் அன்றைய நிர்வாகத்துக்கும் பெரியார் நாகமுத்துவுக்கும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. இவ்வாறு கருத்து மோதல்கள் ஏற்படவே இந்துக் கல்லூரியில் தனது சேவையை உதறித்தள்ளிவிட்டு வெளியேறினார். இவரோடு அங்கு ஏழைச் சிறுவர்களுக்காகப் பாடுபட்ட மேலும் மூன்று ஆசிரியர்கள் தம் பதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறந்து வெளியேறினர்.

**நாவலர் வழியில்**

ஆசிரியர் நாகமுத்து நாவலர் பெருமானை நினைத்துப் பார்த்தார். "சைவச் சிறார் தத்தம் சூழலில் கல்விகற்கச் சைவாபிமானிகள் உதவ முன்வரவேண்டும்" என்ற நாவலர் பெருமானின் அறைகூவலே இவரின் அடிமனதில் இருந்தது. தனதுசூழலிலே அங்குள்ள வசதி வாய்ப்புக்கள் அற்ற ஏழைச்சிறார்களும் எழுத்தறிவு பெறவேண்டும். அதற்குத் தான் ஒரு கல்விக்கூடம் நிறுவ வேண்டும் என்று திடசங்கற்பம் செய்து கொண்டார். சில பெரியாருக்குத் தன் எண்ணக்கருத்தை வெளியிட்டார். இதன் பலனாக 1813ஆம் ஆண்டு முதலில் சிவன் கோவில் காணியில் கொட்டகை அமைத்து, பாடசாலை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. வாடகை ஒரு வருடத்திற்கு ஒரு ரூபாய் என அறியக்கிடக்கிறது. இவரது உளக்கிடக்கை இரண்டு எண்ணங்களைக் கொண்டது. ஒன்று வசதி வாய்ப்புக் குறைந்தவர்களுக்கு அரைக்கட்டணத்தோடு கல்வி, வீட்டில் தளபாட, விளக்கு வசதியற்றோர்க்கு இராப்பள்ளி நடாத்துதல். இவ்விலட்சியங்களை உளங்கொண்டு அவரின் கல்விச்சேவை தொடர்ந்தது. இதன் பயன் பாடசாலை இரண்டாக அமைந்தது. ஒன்று தமிழ் மற்றது ஆங்கிலம்.

தமிழ் பாடசாலையின் பெயர் விவேகானந்தா வித்தியாலயம், ஆங்கிலப் பாடசாலையின் பெயர் வைத்தீஸ்வரா வித்தியாலயம், தமிழ் பாடசாலைக்குத் தனது சகோதரர் வேலுப்பிள்ளையைப் பொறுப்பாக்கினார். ஆங்கிலப் பாடசாலையைத் தான் தலைமை வகித்து நடாத்தினார். காலப்போக்கில் ஒருவாறு விவேகானந்தா வித்தியாலயத்திற்கு அரச மானியம் கிடைத்தது. ஆனால் ஆங்கிலப் பாடசாலைக்கு அரச மானியம் கிடைக்கவில்லை. இதற்கு அரச மானியம் கிடைக்க அன்றைய இந்துக் கல்லூரி நிர்வாகமும் ஒரு முட்டுக்கட்டையாக இருந்தது. எத்தனை கஷ்டங்களின் மத்தியிலும் சில பெற்றோரின் உதவி பெற்று இப் பாடசாலையை நாகமுத்துப் பெரியார் நடாத்தி வந்தார்.

இப்பாடசாலைக் கட்டடத்துக்கு இடவசதி பெறுவதிலும் பெரியாருக்குப் பெரும் கஷ்டம் இருந்தது. ஆன்மீகமும், அறிவியலும் ஒன்றிணைந்தால் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அர்த்தமுள்ளதாகும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர். வைத்தீஸ்வரன் ஆலய தர்மகர்த்தா அமரர் கந்தப்பச் செட்டியாரின் பெரிய தந்தையார் கோபாலசாமிச் செட்டியார் அவர்களை அணுகினார். அவர் இன்றைய கட்டடம் அமைந்திருக்கும் காணியைப் பெறுவதற்கு உதவி செய்தார். விடத்தல்தீவு உடையாருடன் தொடர்புகொண்டு விடத்தல்தீவு விநாயகருக்கு அவர்கள் உடமையாக்கிய இக்காணியைப் பெற்றுக் கொடுத்தார். இதனால் இக்கல்வி நிறுவனம் விஸ்தரிக்கப்பட்டது. அதாவது வைத்தீஸ்வரன் அருளாட்சியில் வித்தியாலயம் வளர்ந்தது.

**நன்கொடை**

எனினும் வித்தியாலயத்தை தொடர்ந்து அரசு நன்கொடையின்றி நடாத்துவது பெரியாருக்குப் பெரும் இடர்பாடாகவே இருந்தது. எனினும் அவரது விடாமுயற்சி பலனளிக்கவே செய்தது. அப்போது யாழ். நீதவானாக இருந்த அக்பர் நாகமுத்துப் பெரியாரை நன்கு அறிவர். அவர் அரச நன்கொடையின்றி வித்தியாலயத்தை நடாத்த அவர் படும் இன்னல்களை நேரில் கண்டவர். தனது செல்வாக்கை நீதவான் பயன்படுத்தி அரச நன்கொடையைப் பெற்றுக் கொடுத்தார். பாடசாலையில் மாணவர் தொகை அதிகரித்தது. இத்தகைய பெரியபள்ளியை வளர்த்துச் செல்லுவதும் நடாத்துவதும் தனியொருவருக்குக் கஷ்டமே எனினும் பெரியார் தளரவில்லை.

**மிஷன் பொறுப்பில்**

இச்சந்தர்ப்பத்தில் இராமகிருஷ்ணமிஷன் தொடர்பால் சுவாமி சர்வானந்தாவை அழைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. றிம்மர் மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது. இச்சந்தர்ப்பத்தில் சுவாமி சர்வானந்தாவுக்கு பள்ளி நிலையை விளக்கினார். 1917இல் விவேகானந்த வித்தியாலயமும், வைத்தீஸ்வர வித்தியாலயமும் ஒன்றிணைக்கப்பட்டு இராம கிருஷ்ணமிஷனிடம் கையளிக்கப்பட்டது. சாதி, மத பேதமற்ற சமர சன்மார்க்க நெறியே இராமகிருஷ்ணமிஷ மடத்தின் நெறி. ஏழைபங்காளராக அமைந்த ஒரு உலகளாவிய நிறுவனம். நாகமுத்துப் பெரியாரின் குறிக்கோள்களும் இவையே. எனவே தன் உள்ளக்கிடக்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்தெடுக்கத் தக்கதொரு புண்ணிய சங்கத்திடம் தன் பள்ளிகளைக் கையளித்ததில் பெருமகிழ்வும் நிம்மதியும் பெற்றார். பெரியார் மிஷன் பொறுப்பேற்றபின் சுவாமி சர்வானந்தாவின் பின் வந்த சுவாமி விபுலாநந்தாவின் நேரடித் தொடர்பால் கல்விச் செயற்பாடுகள் பல்துறையில் பல்கிப் பெருகி யாழ். நகரிலே ஒரு A தரப் பாடசாலையாக வைத்தீஸ்வரா மிளிர்ந்தது.

**ஆன்மீகமும் அறிவியலும்**

வைத்தீஸ்வரா வித்தியாலய வரலாற்றில் இராமகிருஷ்ண மிஷனின் நிர்வாக காலம் ஒரு பொற்காலமாகும். ஆன்மீகமும் அறிவியலும் வித்தியாலயத்தில் அலைமோதிக் கொண்டிருந்தன. இந்தியாவில் இருந்து இங்கு வந்து போகும் இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளின் நற்சிந்தனைகளும், போதனைகளும் மாணவர்களை ஒழுக்கசீலர்களாக்கின. மலையக மாணவர்களுக்கும் இவ் வித்தியாலயம் பெரும் உதவியாகவிருந்தது. அன்றைய தமிழரசுக் கட்சியின் தலைவர் கோப்பாய் கோமான் வன்னியசிங்கத்தின் வேண்டுகோளை ஏற்று மலையக மாணவர் பலரின் உயர்கல்விக்கு மிஷன் உதவியது. அவர்களுக்கு இலவச விடுதி வசதி, கல்வி வசதிகளை வழங்கியது. இதுமட்டுமல்ல யாழ். நகரின் பிரபல பாடசாலைகளில் ஆரம்பிக்கப்படாத பாடப்பரப்புக்கள் இங்கு இருந்தன. லண்டன் A/L வகுப்புக்களும் இங்கு நடைபெற்றன. வெளியிடங்களில் இருந்து வந்த பல ஏழை மாணவர்கள் இங்கு இலவசமாக உயர்கல்வியைப் பெற்றுப் பல்கலைக்கழகங்களுக்கும், வேறு உயர்கல்வி நிறுவனங்களுக்கும் சென்று கல்வி கற்றனர்.

வித்தியாலய நிறுவுனர் பெரியார் நாகமுத்துவின் உளக்கிடக்கைகளை ஏழைக்கு கல்வி, சாதிமத பேதமற்ற நெறி, இலவசக்கல்வி, ஆன்மீகக்கல்வி முதலியன மிஷனால் வித்தியாலயத்தில் பூர்த்தி செய்யப்பட்டன. நல்லதை எண்ணினார் பெரியார். அவர் மறைந்த பின்பு அந்த எண்ணங்கள் நன்றாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவடைந்தன.

இத்தகைய ஒரு புகழ்வாய்ந்த கல்லூரியை யாழ். நகரில் ஸ்தாபித்த நாகமுத்துப் பெரியாரின் – அதாவது செயற்கரிய செய்த இச் செம்மலின் குடும்பத்தையும் சற்றுத் தொட்டுப் பார்க்க வேண்டியது நம் கடமை. 1898ல் பெரியார் திருமணம் செய்தார். 3 பிள்ளைகளுக்குத் தந்தையானார். மூத்தமகள் தையல்நாயகி, இரண்டவாது மாணிக்க இடைக்காடர், மூன்றாவது நமசிவாய இடைக்காடர். பிள்ளைகளும் தந்தைபோன்று கல்வியில் பெரியர். மாணிக்க இடைக்காடர் கொழும்பு, மலேஷியாப் பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகத் திகழ்ந்தவர். பின்னர் இவர் யாழ். உதவி அரசாங்க அதிபராகவும் கடமையாற்றினார். நமசிவாய இடைக்காடர் நீண்டகாலமாகக் கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்விப் பணியாற்றியவர்.

எமது ஸ்தாபகர் நாகமுத்துப் பெரியார் சிறந்த எழுத்தாளருமாவார். 1928இல் சித்தகுமாரன் எனும் நூலையும் 1929இல் நீலகண்டர் இலகுசாதகம் எனும் நூலையும் எழுதினார்.

தன்னலங்கருதாத சமூகத்தொண்டனாக, கல்விமானாக அன்றைய இக்கட்டான சூழலில் ஏழைக்கு எழுத்தறிவிக்க அயராது உழைத்து அதில் வெற்றியும் கண்டு புண்ணியம் கோடி தேடிய புண்ணியராக இவ்வுலகைவிட்டு 1932ல் சிவபதமடைந்தார். பூதவுடல் புகைந்தது. அவர் புகழுடல் நம்மத்தியில் ஒளிவீசி வருகிறது.

(02.08.2003 அன்று இடம்பெற்ற நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் நிகழ்வில் நடத்தப்பட்ட நிறுவுனர் உரை இது)

திருமதி. கு. ஷண்முகடாஸ் B.A.Dip.in.Ed, SLTSI
ஓய்வுபெற்ற ஆசிரியர், பழைய மாணவர் சங்கத்தலைவர்,
அதிபர், தலையாழி ஞானவைரவர் ஆலய அறநெறிப்பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமையைத் தன் கண் என எண்ணிய அதிபர் எங்கள் அதிபர்



யாழ்ப்பாணக் கல்வி வரலாற்றில் புகழ்பூத்த கல்லூரிகளில் ஒன்றாகத் திகழும் யா/வைத்தீஸ்வராக் கல்லூரி அதன் வளர்ச்சி நிறைவுக்கு உழைத்த அதிபர்களைக் கண்டு பெரும் பூரிப்பையே அடைந்துள்ளது. அந்த வகையில் எங்கள் அதிபர் நா. வன்னியசிங்கம் அவர்கள் 34 வருடங்கள் சேவைக்காலத்தில் ஆசிரியராக, பகுதித்தலைவராக, உப அதிபராக, பிரதி அதிபராக, அதிபராக சேவையாற்றிய காலங்கள் பசுமையானவை. அந்தவகையில் யா/வைத்தீஸ்வராக் கல்லூரியில் 12 வருடங்களாக அவரது நிர்வாகத்திற்கு கீழ் ஆசிரியராகப் பணியாற்றியவர் என்பதில் நான் பெருமை கொள்கின்றேன். நிர்வாகக் கட்டமைப்பில் பாரபட்சம் பார்க்காத ஒரு அதிபர், ஆளுமை நிறைந்த அதிபர் சேவை செய்பவர்களை இனங்கண்டு வழிநடாத்தும் பெரும் பக்குவசாலி. பாடசாலை உள்ளக மேற்பார்வை செய்யும் வேளையில் வகுப்பில் ஆசிரியர் வராதபட்சத்தில் என்னபாடம் என வினாவி அந்தப்பாடத்தையே கற்பிக்கும் ஆற்றல் படைத்த கல்விமான். மாணவர்கள் மத்தியில் ஆச்சரியம் ஏற்பட வியக்கத்தக்க செயற்பாட்டைச் செய்து பெருமை சேர்த்த பேராசான். மிகவும் எளிமையானவர் பெரும் தனவந்தர் ஆனால் நடத்தையில் காட்டிக் கொள்ளமாட்டார். எவ்வளவு தூரமாயினும் துவிச்சக்கர வண்டியிலேயே பிரயாணம் செய்து கொள்வார். ஆதலால்தான் போல் அவரை நோய் பீடிப்பதேயில்லை. காலை 7.00 மணிக்குப் பாடசாலைக்கு வந்தால் வீடு திரும்பும் நேரம் 4.30 மணி பாடசாலையின் செயற்பாடுகளில் அயராது உழைத்த ஒரு பெருந்தகை. ஆசிரியர்களோடு சில நேரங்களில் முரண்பாடுகள் ஏற்படும். ஏனெனில் எங்கள் பாடசாலைப் பிள்ளைகள், ஏழைகள், எங்களை நம்பிவரும் பிள்ளைகளை நாம் ஏமாற்றக் கூடாது. இந்த வாக்கியம் அவரது வாயில் அடிக்கடி உச்சரிக்கப்படும். இவ்வாறான பெருமகன் தனது 60வது வயதில் மணிவிழாக்காண இருப்பது சேவையின் உச்சநிலை. ஆயினும் அவர் தனது வாழ்க்கைப் பாதையில் ஓய்வைக்காண வயது வரவேற்கிறது. அவரைச் சீரும் சிறப்பும் பெற்றுக் குடும்பத்தாருடன் நிறைவுடன் வாழ எல்லாம்வல்ல வைத்தீஸ்வரப் பெருமானை வேண்டி நிறைவு செய்கின்றேன்.

**திருமதி. வாசஸ்பதி ரஜீந்திரன்**

**முன்னாள் ஆசிரியர், நலன்புரிச் சங்கத் தலைவர்,**

**யா / வைத்தீஸ்வராக் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திச் செயலாளர் வாழ்த்து



இரண்டு தசாப்தங்களிற்கு மேற்பட்ட காலம் எமது கல்லூரியில் ஆசிரியராகவும், A/L பகுதித் தலைவராகவும், உப அதிபராகவும், அதிபராகவும் கடமையாற்றி இன்று ஓய்வு பெறும் எமது மதிப்பிற்குரிய திரு. நா. வன்னியசிங்கம் அதிபர் அவர்களுக்கு எமது அபிவிருத்திச் சங்கச் செயலாளர் சார்பில் வாழ்த்துரை வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன். பட்டதாரி வணிகத்துறை ஆசிரியராக இணைந்து கொண்ட இவர் பணிகளின் உயர்வுக்கும், மாணவர் கல்விக்கும் உந்து சக்தியாகத் திகழ்ந்தார். போர்க்காலச் சூழ்நிலை காரணமாக கல்லூரியில் பல பிரச்சினைகள் இருந்தபோதும் பிரச்சினைகளுக்கு எங்கு செல்ல வேண்டுமோ அங்கெல்லாம் சென்று தனது பணியைத் திறம்படச் செய்து முடித்தார். சிறந்த கடவுள் பக்தி கொண்ட இவர் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் திருவிழாக்களைத் திறம்படச் செய்து வந்தார். தொழில் ரீதியாக ஓய்வுநிலை அடைந்தாலும், அவரது தொடர்புகள் யாவும் தொடர்ந்து வைத்தீஸ்வராக் கல்லூரியில் தொடரும் என்பதில் ஐயமில்லை. அவரது ஓய்வுகாலம் மிகவும் சிறப்பாக அமைய வண்ணை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானை வேண்டி அவர் மேலும் நூற்றாண்டு காலம் சிறப்பாக வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**திரு.தி.சிவலிங்கம்**
**செயலாளர்**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் குறித்த வாழ்த்துப் பாமாலை

செந்தமிழும் சிவநெறியும் செழித்து ஓங்கும்
சீர்மிகுந்த யாழ்ப்பாணத் திருநகரில்
வந்தனையோடு கல்வி வளம் காத்தே
வைத்தீஸ்வரா எனும் நாமம் பூண்டே
தந்த பெரும் சேவைதனை மறக்கலாமோ
தரம் சேர்த்த அதிபரவரை எண்ணியிங்கே
இந்த விழா எடுத்திங்கே மகிழ்ந்தே யாம்
இன்புற்று எந்நாளும் மகிழ்ந்தே வாழி

கல்வியில் தமிழ் மண்ணில் கதித்து மேலாம்
கற்கைநெறி மிக்குயரக் கணிப்புச் செய்து
நல்ல முறை பள்ளிதனில் பணிகள் ஆற்றி
நடைதேர்வு பிறகருமம் நன்றே யாக்கி
அலல்லுற்ற எம் செல்வச் சிறார்க்கென்றும்
அன்புடனும் அடக்கமுடனும் சேவையாற்றி
உள்ள மதில் உவகை பொங்க கடமையேற்று
உத்தமரே வன்னிய சிங்கம் ஐயா வாழி வாழி!

சாந்த மெனும் சற்குணமும் நிறைந்து தோன்றும்
சால்புறு நல்லாசாரம் பொலிந்து தோன்றும்
காந்தமிகு கல்வியெழில் சிறந்து தோன்றும்
கவின் கலையில் நாட்டமது மலிந்து தோன்றும்
ஏந்தலவன் வன்னியங்கம் ஏற்றிவைத்த கல்வித்தீபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றமுடன் ஈழமெங்கும் பிரகாசித்ததே
பூந்தமிழின் வைத்தீஸ்வரா வித்தியாலயம்
பொலிந்ததுவே கல்வியினால் வாழி வாழி!

அதிபரெனும் வாஞ்சையுடன் வித்தியாலயத்தில்
ஆளுமை அளப்பரிய பணிகளாற்றி
தேசாக மிளிர நிறை செயல் வாஞ்சையுடன்
சிறந்த தொரு சேவையாளனென மிளிர்ந்தே
நேசமுடன் மாணவர்க்கு சேவைபல புரிந்த
நினது புகழ் அவனிதனில் நிலைக்கும் என்றும்
ஆசி தரும் கலைமகளின் அருளினாலே
அவனியிலே பல்லாண்டு வாழி வாழி!

நிறைவுக்கோர் நிலையமான வன்னியசிங்கம் ஐயா வாழி
நெடுமறைப் பொருளேயான வன்னியசிங்கம் ஐயா வாழி
துறை தொறும் சோதியான வன்னியசிங்கம் ஐயா வாழி
தொல்லறத்தின் கல்வியாளனென வாழி வாழி
இறையருள் ஆணைபெற்ற அதிபரென வாழி வாழி
இலங்கிடும் வைத்தீஸ்வரா கல்லூரி வாழி வாழி
மறையுள்ளவரையும் மாண்புகள் பெருக்கி வாழி
மானிலம் போற்றிடும் மணிவிழா நாயகனாய் வாழி வாழி!

**வர்ணனைக் கலாநிதி, மதுரகவி,**

**காரை எம்.பி. அருளாந்தன் (J.P)**

**ஆசிரியர் ஸ்ரான்லிக் கல்லூரி யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயர்வில்லா மானிடமணி

மானிடத்தின் விழுமியங்கள் அத்தனையும் கொண்டு நின்று
நானிலத்தில் முழு நலன்கள் எத்தனையோ புரிந்து இன்று
தேனினிக்கும் மொழிநயத்தால் முத்தெனவே உதிர்த்து நின்று
ஞானமிகு மனிதனென வாழ்கின்ற உத்தமன் நீ!

உயர்வுகளைப் படிப்படியாய் முயற்சியுடன் பெற்றுயர்ந்து
அயர்வுகளே இல்லாமல் மாணவத்தின் பெருமை கண்டு
துயர்களைந்து கல்வியிலே கனிமரமாய் நீயிருந்து
பெயரடைந்து புரிந்தபணி புவியறியும் உண்மையிதே!

கணக்கியலில் மாணவர்கள் மனதுடனே பயின்றுவர
பிணக்ககற்றி ஆனவழி தினமுரைக்கும் பக்குவத்தை
துணிச்சலுடன் ஆற்றியுயர் கல்வியதை வளர்த்தவன் நீ
பணிக்கெனவோர் முத்திரையை அறிவியலில் பதித்தவன் நீ!

முத்தமிழும் முழு அறிவும் வளரும்வகை பணிபுரிந்து
எத்தினமும் அழகுறச் சிந்தனைகள் பலவுரைத்து
எத்தகைய முடிவினையும் தீர்க்கமுடன் தானெடுக்கும்
வித்தகனாய் முழுஒளியை பள்ளியிலே பரப்பி வென்றாய்!

உற்றபணி யாவையுமே கச்சிதமாய் தான் முடித்து
நின்னுறவாய் ஆசிரிய மாணவர்கள் மனங்களிலே
உறைந்து நின்று ஓய்வுபெறும் உத்தமனே மானிலத்தில்
நின் புகழும் நின்வாழ்வும் நீடுயர வாழ்த்துகின்றோம்.

**தமிழ்ப் பேரவை**
**யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Massage from the Hearts of the Teachers of English

Our honourable Principal Mr. N. Vanniyasingam of J/Vaidyeswara College is one of the leading personality in school administration. He has been rendering his valuable service to the school community from 1987 till now. In 2004, The Light House School Unit for English Language teaching and learning was established by him in our school. As a result, more than a hundred of schools in the Jaffna Zone are able to get good opportunities in their learning activities.

Our Principal is the patron of the English Union of our school and is very helpful to conduct our monthly meetings. He motivates students to participate in several activities in these meetings of the English Union. Many more students, who were treated by him, are in top posts in our country as well as in foreign countries. Further most we appreciate his kindness and punctuality. We wish him a bright prosperous future life and good health.

Thank you very much

**Teachers of English**

**English Union**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ மன்றத்தின் வாழ்த்துச் செய்தி

"சாதி மத பேதமற்ற சமரச சன்மார்க்க நெறி" என்ற தாரக மந்திரத்தை தனது கருத்தாக்கிக் கொண்ட எம் கல்லூரி அதிபர் அவர்கள் தமிழையும், இந்து சமயத்தையும் முதன்மையாகக் கொண்ட இக் கல்லூரியில் கிறிஸ்தவ மாணவர்களும் சம உரிமையுடன் காலை வழிபாடுகள் நடத்தவும், தியானங்கள் மேற்கொள்ளவும் வருடாவருடம் ஒளிவிழா நிகழ்வினை மிகச்சிறப்பாக நிகழ்த்தவும் எமக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்தமையுடன் தானும் எம்முடன் ஒருவராகப் பங்கேற்று பக்கபலமாக இருந்து வந்துள்ளார். அவரது இச் செயற்பாடானது ஆன்மீக வாழ்விற்கு அவர் கொடுக்கும் முக்கியத்துவத்தையே எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறு எமக்கு அறிவுரைகள் கூறுவதில் தந்தையாகவும், அன்பு காட்டுவதில் தாயாகவும் திகழ்ந்த எமது அதிபர் அவர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார் என்பது மன வேதனையைத் தருகின்றது. எனினும் கிறிஸ்தவ மன்றத்தினராகிய நாம் மணிவிழா நிகழ்வினை காணும் எம் நாயகன் என்றும் இறைவனின் ஆசீயைப்பெற்று அவர் செல்லும் இடமெல்லாம் அவர் செய்த பணியின் பயன்கள் கிடைத்து ஆன்மீக சுகத்துடன் நீடூழி காலம் வாழ்க என வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகின்றோம்.

**கிறிஸ்தவ மன்றம்**

**யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் மனங்களில் மணம் வீசும் மலர்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

என்பது திருவள்ளுவப் பெருந்தகையின் வாக்காகும். இந்த அரும் பெரும் வாக்கியத்திற்கு அமைவாக வாழ்ந்து காட்டியவர் எமது அதிபர் திரு. நா. வன்னியசிங்கம் ஐயா அவர்கள்.

அன்பும், உயர்பண்பும், அறிவுரையும், சிறந்த ஆளுமையும் நிறைந்த யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் முத்திரை பதித்த அதிபராக நீண்டகாலம் பணியாற்றி ஓய்வுபெறுகின்ற அவரை வாழ்த்துவதில் அகமகிழ்கின்றோம்.

அந்த வகையில் இவர் கல்லூரிக்காக ஆற்றிய பணிகளை நாம் வார்த்தைகளால் வடிக்க முடியாது. எமது கல்லூரியின் தற்போதைய அதிசிறந்த வளர்ச்சிக்கு அவர் தன்னை மெழுகாய் உருக்கிச் செயறபட்டார். எமது அதிபர் தனது வீட்டில் இருந்த நேரத்தைவிடக் கல்லூரியில்தான் தனது வாழ்நாட்களை அதிகம் செலவளித்துள்ளார். சனி, ஞாயிறு போன்ற விடுமுறைத் தினங்களிலும்கூட அவர் கல்லூரிக்கு வந்து வைத்தீஸ்வரப் பெருமானுக்கான நித்திய பூசைகளை முடித்த பின்னரே வீடு செல்வார். ஆன்மீக நெறியில் மாணவர்களை வழிநடத்திய அதேவேளை தானும் அதன் வழி நடந்து காட்டியவர். போதனைகளைப் போதித்து மட்டுமல்லாது அதனைத் தனது வாழ்விலே கடைப்பிடித்துச் சாதனை படைத்தவர். தான் சொல்கின்ற வழியிலே செயற்படுபவர். அவரது சொல்லும், செயலும் ஒன்றாகவே காணப்படும். இதுவே நாம் அவரிடம் கற்றுக்கொண்ட பாடமாகும்.

அவரது ஓய்வு காலங்களில் அவர் எமது கல்லூரிக்கு வரமாட்டாரே? அப்படி வராவிட்டால் நாம் கல்லூரி முன்றலிலே அவரது முகத்தைக்காணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினம்தினம் ஏங்குவோம் என்ற அச்சம் எம்முள்ளே இப்போதே குடிகொண்டுவிட்டது. ஏனெனில் அந்தளவிற்கு எம் மாணவர் மனங்களிலே ஊறிப்போனவர் எமது அதிபர்.

எமது கல்லூரியைக் கல்வித்துறை, விளையாட்டுத்துறை போன்ற ஏனைய சகல துறைகளிலும் மிளிரச் செய்த பெருமைக்குரியவர். மாணவ தலைவராகச் சின்னம் சூட்டி அவர்களின் பதவியை உறுதி செய்து கொண்டவர். கல்வியைப் பெறுவதற்கு வறுமை ஒரு தடையாக இருக்கும். மாணவர்களை இக்கல்லூரியில் இணைத்து அவர்களுக்கான கல்வியைப் பெற்றுக் கொடுத்தவர். மாணவர்களிடம் தனி அன்பும், மதிப்பும், கரிசனையும் கொண்டவர். மாணவர் எல்லோருடைய மனங்களிலும் ஓர் தனி இடம் பிடித்தவர்.

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி கற்றல் கற்பித்தல், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் யாவற்றிலும் தரமுயர்ந்து நிற்க வேண்டும் என்பதற்காக என்றும் அயராது உழைத்தவர், உழைப்பவர். இவர் ஓய்வெடுப்பது எமது கல்லூரிக்கு ஓர் பெரும் இழப்பாகும்.

அந்தவகையில் "கடமையே கருத்தனம்" என்ற கொள்கையில் கடமையில் நிறைவுகண்டு மாணவரோடு மாணவராய் எம்மிடையே வாழ்ந்து அன்புடன் பழகி மாணவர் பலரது உள்ளத்திலும் இடம் பிடித்துவிட்ட எமது அதிபர். இளைப்பாறிச் செல்லும் தனது ஓய்வு நாட்களிலே உடல் நலத்துடனும், மகிழ்ச்சியுடனும், நிம்மதியுடனும் நீடூழி வாழவேண்டும் என வாழ்த்தி வைத்தீஸ்வரப் பெருமான் பாதங்களைப் பணிகின்றோம்.

**மாணவ முதல்வர்கள் சபை**

**யா/வைத்தீஸ்வராக் கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்திய வாழ்த்தொலி.......

"மெய்வருத்தம் பாரார்! பசி நோக்கார்
கண் துஞ்சார்! கருமமே கண்ணாயினார்!"

இது சான்றோர் வாக்கு. இவ்வாக்கின் ஒரு மொத்த வடிவம், எமது கல்லூரி அதிபராக இருந்து ஓய்வு பெறும் திருவாளர் நாகலிங்கம் வன்னியசிங்கம் என்றால் அது மிகையல்ல.

ஒவ்வொரு மாணவனும் சீரிய, நல்ஒழுக்கம் மிக்க மாண்புடைய மாணவனாகத் திகழ வேண்டும் பல்வேறு திறனுடைய மாணவனாக மாறவேண்டும் என்ற வேணவா அதிபரின் ஆதங்கமாக ஒலித்ததை அவரது வாராந்த நற்சிந்தனைப் போதனைப் பேச்சிலும், செயலிலும் காண முடிந்தது.

கல்லூரி எல்லோரையும் முதல் மாணவனாக்க முடியாது போனாலும் ஒரு சமூகப் பொருத்தப்பாடுடைய நற்பிரஜையாக மாற ஆசிரியர்கள் எல்லோரும் கூட்டாகத் தன்னுடன் ஒத்துழைக்க வேண்டும் என்பதே அவரின் பேராசையாக இருந்தது.

"தீயவை தீய பயத்தலாற் தீயவை
தீயினும் அஞ்சப்படும்" (திருக்குறள்).

என்ற குறளுக்கு ஏற்ப எதற்கும் அஞ்சாத சிங்கமாக நிர்வாகம் செலுத்திய அதிபர் தீயவைக்கு மட்டும் அஞ்சினார். எல்லா மாணவர்களும் ஒழுக்கத்தை உயிரினும் மேலாகப் பேணி வையத்துள் வாழ்வாங்குவாழ வேண்டும் என்று அடிக்கடி கூறுவார். தீயவன் என்ற பெயரை இலகுவில் பெறலாம். நல்லவன் என்ற பெயரை வாழ்நாள் முழுக்கத் தக்கவைக்க முன்னிற்பவனே மாணவன் என உரைப்பார். இது பெருமனிதனுக்குரிய ஒரு பண்பு ஆகும். அந்தவகையில் அவரின் கீழே கடந்த ஒன்றரை வருடங்களாகவே நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிபுரிந்தாலும் ஓர் ஆளுமைமிக்க அதிபர் என்பதை அவரின் பல்துறைசார் ஆற்றல், அறிவுகள் மூலம் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

கணிதபாடமா?, தமிழா?, வர்த்தகமா?, விஞ்ஞானமா?, ஆங்கிலமா?, சமயமா? என எந்தப்பாடமாயிருந்தாலும் அதனை அந்தத்துறைசார் ஆசிரியர்போலக் கற்பிப்பதில் ஆற்றலும், புலமையும் உடையவராகத் திகழ்ந்தார். ஆசிரியர் இல்லாத வகுப்புக்களில் அவர் புகுந்து கற்பிப்பதைக் காணும்பொழுது வியக்காமல் இருக்க முடியாது. சமயவிழாக்களைக் கனகச்சிதமாகச் செய்யவேண்டும் என்பதில் மிகவும் கருத்துடன் செயற்பட்டவர். நடராஜப் பெருமான் மீது ஆராத பக்தி உடையவர் தன்னை மறந்து வழிபடும் செயற்பாடுள்ளவர் எத்தனையோ சோதனைகள் எல்லாவற்றையும் புன்சிரிப்புடன் ஏற்றுச் சாதனைகளாக்கியவர் இது எப்படி எனக் கேட்டால் "நான் நம்பிய வைத்தீஸ்வரன் என்னைக் கைவிடான்" என்ற நம்பிக்கையின் குரலாக அவரின் குரலைக் கேட்டேன், இதுவன்றோ தெய்வீகம்.

தைப்பொங்கல் அன்று அவரே முன்னின்று பொங்குவார். சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல் என இரு பொங்கல். கறி சமைப்பார் எல்லாம் அவரே செய்வார். அவரின் கைவண்ணம் அபாரம். அப்படி ருசிமிக்க பாகம் அவரின் கைவண்ணம். இதனைப் பல ஆசிரியரும் கூறக்கேட்ட நான் கடந்த இரு பொங்கலிலும், நேரிலும், சுவைத்தும் உள்ளேன். இப்படியாகச் சகலகலாவல்லவராகிய எமது அதிபர் ஓய்வு பெற்றுப்போவது ஒரு பிரிவுத்துயராக இருப்பினும், அவர் தமது ஓய்வுக்காலத்தில், சகல செல்வயோகமிக்க பெருவாழ்வுவாழ எல்லாம் வல்ல சிவகாமி சமேத நடராஜப் பெருமானை நினைத்து வேண்டுவோமாக. மேலும், அவர் தம்மைப்போல் ஒரு சமயப்பற்றுள்ள, இக் கல்லூரிக்குப் பொருத்தமான ஓர்அதிபரைப் பெற்றுத் தந்ததற்கும், நன்றிகூறக் கடமைப்பாடுடையவர்களே. எனவே இந்து மன்றப் போஷகராக இருந்து இதுவரை காலமும், எம்மை ஆற்றுப்படுத்திய அவரை இந்து மன்றம் சார்பாக "வாழ்த்துகின்ற வாழ்த்தொலி" இறையர்ப்பணமாகட்டும்.

**இந்துமா மன்றம்**

**யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் சேவைக்காலத்தில் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள்

1. ஆண்களுக்கான துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் அமைத்தது.
2. வலைப்பந்துத் திடலை அமைத்தது.
3. பூந்தோட்டச் சுவர் அமைத்தது.
4. விஞ்ஞான ஆய்வுகூடம் மறுசீரமைத்தது. (திணைக்கள நிதி)
5. நீர் வழங்கலுக்காக மோட்டார் பொருத்தியது.
   (மு. ஜெயம் பழைய மாணவனின் அன்பளிப்பு)
6. மின்னிணைப்பை ஏற்படுத்தியது. (பா. அ. ச. நிதி)
7. தொலைபேசி வசதி ஏற்படுத்தியது (பா. அ. ச. நிதி)
8. பாடசாலைக்குக் கிழக்குப்புறப் பகுதிக்கு முகப்பு மதில்கட்டி கேற் அமைத்து, பாடசாலை பெயர்வளைவு அமைத்தமை.
   (லண்டன் ப. மா. ச. நிதி)
9. வெளிச்சவீட்டுப் பாடசாலை அலகு ஏற்படுத்தியது.
   (Light House School Unit) (கல்வி அமைச்சு நிதி) 300,000/-
10. கணனிக்கூடம் அமைத்து 10 கணனிகள் பொருத்தியது.
    (லண்டன் ப. மா. ச. நிதி)
11. கணனியும் அதன் தொடர்புச் சாதனங்களும் பெறப்பெற்றது.
    (புனர்வாழ்வு அமைச்சு)
12. வீடியோ ஓடியோ அலகு ஏற்படுத்தியது.
    (SEMP மாகாணக் கல்வித் திணைக்கள நிதி)
13. புதிய மாடிக் கட்டடம் அமைத்தது. (130' x 25') (RRAN + G.T.Z நிதி)
14. ஆண். பெண் மாணவருக்கான மலசலகூடம் அமைத்தது. (G.T.Z நிதி)
15. ஒலிபெருக்கிச் சாதனங்கள் பெறப்பட்டது.
    (அன்பளிப்பு திரு.T.லோகநாதன், பழைய மாணவன்)
16. க. பொ. த உயர்தர வகுப்பில் விஞ்ஞான, கணிதபிரிவு ஆரம்பிக்கப்பட்டு கல்லூரி 1AB தரமாக உயர்த்தப்பட்டது. (2002ஆம் ஆண்டு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. ஆங்கில மொழிமூலக் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது. (2006ம் ஆண்டு)
18. ஒலிபெருக்கிச் சாதனம் பெறப்பட்டது.
(பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. பத்மினி சிதம்பரநாதன் அவர்களது பன்முகப்படுத்திய வரவு செலவு நிதியிலிருந்து)
19. நூலக அபிவிருத்தியும், நூலகத் தளபாடக் கொள்வனவும்
(பாராளுமன்ற உறுப்பினர் திரு. சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்களது பன்முகப்படுத்திய வரவு செலவு நிதியிலிருந்து)
20. 75 இரும்புக் கதிரைகள் செய்யப்பட்டது. (வணிக மாணவர் மன்ற நிதி)
21. 50 பிளாஸ்ரிக் கதிரைகள் பெறப்பட்டது.
(அன்பளிப்பு : மனதுருக்கம் இலங்கை அமைப்பைச் சார்ந்த பழைய மாணவன் போதகர் துரைராசா அவர்கள்)
22. பிரதான மண்டபத்திற்கும், நூலகத்திற்கும், அதிபர், உப அதிபர் அலுவலகங்களுக்கும் மின்விசிறி, மின்குமிழ்கள் பொருத்தப்பட்டது.
(தாய்ச்சங்க பழைய மாணவர் சிலரும் லண்டன் சங்க உறுப்பினர்கள் சிலரும் வழங்கியது)
23. மேற்கத்தைய வாத்தியக் குழுவுக்கான கருவிகள் கொள்வனவு செய்து பாண்ட குறுப் அமைத்தது.
(அன்பளிப்பு லண்டன் பழைய மாணவன் திரு. S. சுந்தரராஜன் அவர்கள்)
24. மேற்கத்தைய வாத்தியக் குழுவுக்கான சீருடை அமைத்தது.
(அன்பளிப்பு லண்டன் பழைய மாணவன் திரு.மு.கே.திருச்செல்வம் அவர்கள்)
25. புதிய மாடிக் கட்டடத்திலுள்ள சகல வகுப்பறைகளும் இரும்பு நெற் மூலம் அடைத்து கதவுகள் பொருத்தி பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டது. (யுனிசெப் நிதி)
26. இரண்டாவது கணனிக்கூடம் குளிரூட்டப்படக்கூடிய மாதிரி வசதியாக அமைக்கப்பட்டது.
(SEMP திட்டத்தின் கீழ் மாகாணக் கல்வித் திணைக்கள நிதி)
27. புதிய தளபாடங்கள் தருவிக்கப்பட்டமை
(ESDFP மூலம் 75 சோடி 1A தர மாணவர் மேசை, கதிரைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NECORD மூலம் 60 சோடி மாணவர் மேசை, கதிரைகள்,

G.T.Z நிதிமூலம் 130 சோடி 1A தர மாணவர் மேசை, கதிரைகள்

28. முன்னாள் அதிபர்கள், உபஅதிபர்கள் பெயர்ப்பலகை உருவாக்கி காட்சிப் படுத்தப்பட்டது.
29. ஆண் பிள்ளைகளும் கழுத்துப்பட்டி அணியச் செய்தமை.
30. மேற்கு மண்டபம், வைரமுத்து மண்டபம் ஆகியவற்றுக்கு மின்னிணைப்பு வழங்கி மின்குமிழ்கள் பொருத்தப்பட்டது.
31. யாழ்ப்பாணக் கோட்டக் கல்வி அலுவலகம் பாடசாலை வளாகத்துள் இயங்க அனுமதி வழங்கப்பட்டது. (2002)
32. பழைய மாணவர் சங்க அலுவலகம் இயங்க இடமளிக்கப்பட்டது. (1998)
33. கணனியும் அதன் தொடர்பு சாதனங்களும் பெறப்பட்டது.
(அன்பளிப்பு – செலான் வங்கி, யாழ்ப்பாணம்)
34. கணனியும் அதன் தொடர்பு சாதனங்களும் பெறப்பட்டது. (பலாலி இராணுவப் பொறுப்பதிகாரியின் அன்பளிப்பு)
35. கல்லூரிக்குத் தொலைநகல் இயந்திரம் (Fax Machine) பெறப்பட்டது.
36. கணனியும், கணனித் தொகுதிகளும், கணனித் தளபாடங்களும் 100,000/– பெறுமதியானவை.
(பாராளுமன்ற உறுப்பினர் திரு. R. M. இமாம் அவர்களது பன்முகப்படுத்திய வரவு செலவு நிதியிலிருந்து)
37. போட்டோப் பிரதி இயந்திரமும், மல்ரி மீடியாவும் கொள்வனவு செய்யப்பட்டது. (கமநெகும திட்டநிதி 300,000/-)
38. வடக்கின் வசந்தத் திட்டத்தின்கீழ் 40" x 25" கட்டிடத் தொகுதி புனரமைக்கப்பட்டு செயற்பாட்டறை அமைக்கப்பட்டது.
39. திட்டத்தின் கீழ் மூன்றாவது கணினிக்கூடம் அமைக்கப்பட்டது.
40. திட்டத்தின் கீழ் 05 கணினிகளும் 10 மேசைகளும் பெறப்பட்டு பொருத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியமிர்தம் மலர்க் குழுவினரின் மனம் நிறைந்த நன்றிகள்

அகவை அறுபதை நிறைத்த

வன்னிய சிங்கம் அவர்களின் மாண்பு குறித்த

வன்னி அமிர்த நிவேதனத்திற்கு

வாழ்த்துச் செய்திகள் வரைந்தவர்க்கும்

தேமதுரத் தீந்தமிழால் செய்திகள் பல தந்தவர்க்கும்

விழா நாயகனை இன்முகம் காட்டி இதம் செய்தவர்க்கும்

மணிவிழாக் கண்டு மனம் மகிழ்ந்தவர்க்கும்

வன்னி அமிர்தம் பவனிவரத் துணையாய் இருந்தவர்க்கும்

அணிகலனாய் இம் மலரை அலங்கரித்த

அன்ரா நிறுவனத்தினருக்கும்

முன்வந்து செயற்பட்ட அபிவிருத்திக் கழகத்திற்கும்

உடனிருந்து உதவிய வித்தியாலயச் சமூகத்திற்கும்

அமிர்தம் தோன்ற அயராது உழைத்த அனைவர்க்கும்

மலர்க் குழுவின் மனம் நிறைந்த நன்றிகள்

மலர்க் குழுவினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நிகழ்வுகள்


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பா... ழ்வுகள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org